Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 342
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 9 ஜூலைக்க் 24 வெள்ளிக்கிழமை (22-1-71)

நீர்வேலி
சங்கத்தில் தயாரிக்கப்படும்
அடைப்பு
இரும்பு பூட்டுகள்
அவர்களால்
சீல் செய்தபடியே விற்கும்
ஒரே ஒரு ஸ்தாபனம்
ஸ்டீல்சன்ஸ்
287 - 289, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7035

# அரிசியின் விலையைக் குறைக்க சீனா இணக்கம்

## ஒப்பந்தம் கைச்சாத்து

கோட்டை, வியாழன்

இலங்கைக்கு வழங்கும் அரிசியின் விலையைக் குறைப்பதற்கு சீனா இணங்கியிருக்கின்றது.

இன்று கொழும்பில் கைச்சாத்திடப்பட்ட வர்த்தக உடன்படிக்கையொன்றின்படி இந்தச் சலுகையை அளிக்க சீனா முன்வந்திருக்கின்றது.

இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி கஷ்டங்களைப் போக்கிக் கொள்ள உதவும்வகையில் சீனா இந்தச்சலுகையை அளிக்கின்றது.

சீனாவுக்கும் இலங்கைக்குமிடையிலான ரப்பர்-அரிசி பண்டமாற்று வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் கொழும்பில் நடைபெற்று வந்தன. இந்தப்பேச்சுக்களில் கலந்துகொள்ள சீன வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் தலைமையில் ஒரு தூது கோஷ்டி இலங்கைக்கு வந்தது.

இப்போது கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி சீனா வழங்கும் அரிசியின் விலை மெட்ரிக்டன் ஒன்றுக்கு 5 ஷில்லிங் குறையும்.

இவ்வாறு சீனா 5 ஷில்லிங் விலைக் குறைக்க இலங்கைக்கு 50000 ஷில்லிங் மீதமாகும் என வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

மேற்படி உடன்படிக்கையைக் கைச்சாத்திட்ட சீன வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. சைஷிபாய் இந்த ஒப்பந்தம் பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் ஏகாதிபத்தியத்துக்கெதிரான போராட்டத்துக்கு பெரிதும் உதவும் எனத்தான் நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் இருநாடுகளும் றப்பர், தென்குப் பொருள் மிளகாய், ஜவுளி, சிமெந்து, ரசாயனப் பொருள்கள் வெங்காயம் ஆகியவற்றைப் பண்டமாற்றுச் செய்து கொள்ள உள்ளன.

மத்திய வங்கியின் மகாநாட்டு மண்டபத்தில் இந்த சீன - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

(சி. பி. ஏ.)

## மேலை நாட்டில் மன அமைதித் தாகம்

நாவலப்பிட்டி, வியாழன்

"நல்ல நாமங்களை நாம் உச்சரித்தால் நமக்கே வாழ்வுண்டாகும். இறைவன் நாமத்தை உச்சரித்து முழக்கிட எமது ஆன்மா விழிப்படையும். இயந்திரமய உலகில் அமைதி வேண்டித் திரிந்த பணக்காரர்கள் எனது சிஷ்யர்களாகி ராம நாம பஜனையிலும், பிரார்த்தனையிலும் மனம் லயித்து ஆத்ம திருப்தியும் மனச் சாந்தியும் பெற்றுள்ளனர்"

இவ்வாறு யோகிராஜ் சச்சிதானந்தசுவாமிகள் கொத்மலை வெஸ்ட்ஹோல் தோட்டத்தில் டம்பெற்ற வரவேற்புக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வெஸ்ட்ஹோல் இந்துசமய அபிவிருத்திச்சபை ஆதரவில் டாக்டர் எம். டி. செல்லையா ஒழுங்குசெய்த இவ்வைபவத்தில் சுவாமிகளுடன் அமெரிக்க சிஷ்யர்களும் கலந்துகொண்டு ராமநாம பஜனை செய்தனர்.

சுவாமிகளை வரவேற்கத் தோட்டத் தொழிலாளர் திரண்டு வந்ததால் இட நெருக்கடி காரணமாகச் சுவாமிகள் முத்துமாரியம்மன்கோவிலில் ஒழுங்குசெய்யப்பட்ட மேடையை விட்டு வெளியில் வந்து தரையிலிருந்த தொழிலாளர்களுக்கு அருளுரை வழங்கினார்.

அவர் தம் அருளுரையில் தொடர்ந்து கூறியதாவது:

"பணத்திற்காக நாம் பாடுபடுகிறோம். மேலைநாட்டில் பணத்தை வைத்துக்கொண்டு செய்வதறியாது மன அமைதி தேடித் திரிகின்றனர். காரணம் தெய்வ நம்பிக்கை அற்றுப்போனதாலேயே. சந்திரனை அடைந்தால் மட்டும் மனச் சந்தோஷம் கிடைக்காது. கூச்சமின்றிப் பிறருக்குச் செய்யும் தொண்டே சந்தோஷம் தரும். இறைவன் தொண்டர்களுக்குள்ளேயே அடங்கியுள்ளார். தொண்டருக்குச் செய்யும்பணி இறைவனுக்கே செய்யும் பணியாகும்."

இவ்வைபவத்தில் வெஸ்ட்ஹோல் இந்துசமய அபிவிருத்திச் சபை ஆதரவில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா மலையகத்தில் ஆற்றிவரும் சமயச் சேவையைப் பாராட்டுமுகமாகச் சுவாமிகளால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

அராலி

## உப்பளத்தை பார்வையிட அமைச்சர் வருகிறார்

அராலி, வெள்ளி

கல்லுண்டாய் உப்பளத்தைப் பார்வையிடுவதற்காக இம்மாதம் 26ந் திகதி கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா வருகை தருவதாக அறிவித்துள்ளார்.

அண்மையில் வடபகுதிக்கு விஜயஞ்செய்த வெளிநாட்டு உள்நாட்டமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்தினாவிடம் மேற்படி உப்பளத்தின் தற்போதைய நிலைபற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

மேற்படி கோரிக்கைகளை ஆராய்ந்த கைத்தொழில் அமைச்சர் இங்கு வரவிருக்கிறாரென்றும், அவருக்கு வரவேற்பளிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் தெரியவருகிறது.

முந்திய அரசாங்கத்தின் கைத்தொழில் அமைச்சர் இந்த உப்பள முன்னேற்றத்துக்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வழங்க உறுதியளித்திருந்தார்.

## சிங்களமும் ஆங்கிலமும்

வேலணை, வியாழன்

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 2-ந் திகதி வெளியான அஞ்சாட்டுத் தொகுதி 92-ம் இல 11-ம் அனுபந்தத்தில் வெளியிடப்பட்டுள்ள பதில் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மட்டுமே பிரசுரமாகியுள்ளன. தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சருடன் திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. தொடர்பு கொண்டு இத்தவறு தொடர்ந்தும் நிகழாதிருக்க ஆவன செய்யும்படி கேட்டுள்ளார்.

## இலவச பாடப் புத்தகம்

கிளிநொச்சி, வியா

கிளிநொச்சிப் பட்டினசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பட்டினசபையினர் 3,000 ரூபா பெறுமதியான பாடப் புத்தகங்களை அடுத்த வாரம் இலவசமாக வழங்குவர்.

5 பிள்ளைகளின் தாய்

## பொலிடோல் அருந்தி தற்கொலை

பருத்தித்துறை, வியாழன்

கரவெட்டி மேற்கைச்சேர்ந்த செல்லையா பொன்னுச்சி என்னும் பெண்மணி செவ்வாய்கிழமை காலை பொலிடோல் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

ஐந்து குழந்தைகளின் தாயாரான இவரது மரணம் பற்றி விசாரணை செய்த மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

......

## கோரிக்கை

அராலி, வியா

அராலி தெற்கு, கிழக்குப் பயிர்ச்செய்கைக் குழு இப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு நல்ல போக்குவரத்து வசதியையும், நீர் வசதியையும் அளிப்பதற்காக வாய்க்கால்கள், வண்டிப் பாதைகள் ஆகியவற்றைச் சிரமதான மூலம் அமைத்துத் தருமாறு சமநலச் சேவை உதவி ஆணையாளர் மூலம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளனர்.

இ. போ. ச. ஊழியர்கள்

## சம்பளத்திலும் பார்க்க 3 மடங்கு "ஓவர்டைம்"

கோட்டை, வியாழன்

இ. போ. ச. ஊழியர்கள் தமது சம்பளத்திலும் பார்க்க மூன்று மடங்கு மேலதிகநேரவேலை ஊதியத்தைப் பெற்றுக்கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இ. போ. ச. கராச்சுகளில் ஊழியர்கள் மேலதிகவேலை நேரமென்று பதிவுசெய்துவிட்டு நித்திரைசெய்துகொண்டிருந்ததையும் காரச் ஒன்றுக்குத் திடீர் விஜயஞ்செய்த உதவிப் போக்குவரத்து அமைச்சர் திரு. ரி. பி.எம். ஹெரத் கண்டுபிடித்தார். 42, 40, 38, 36 மணித்தியாலங்கள் வரை தொடர்ந்து வேலையிலிருப்பதாகச் சில ஊழியர்கள் பதிவு செய்திருந்ததையும் அமைச்சர் அவதானித்தார்.

சகல உயர் உத்தியோகத்தர்களும் மேலதிக வேலை செய்துகொண்டிருப்பதாகப் பதிவேட்டில் குறிக்கப்பட்டிருந்ததாகவும். மேலதிக நேரவேலை செய்வதாகப் பதியப்பட்டிருந்த ஊழியர்கள் சிலர் வேலையில் இல்லாமலிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதுசம்பந்தமாக 9 பேர் உதவி அமைச்சரின் உத்தரவின்பேரில் தற்காலிக வேலை நீக்கஞ்செய்யப்பட்டனர்.

ஒரு டிப்போவின் உயர் உத்தியோகத்தர் ஒருவர் எதுவித அறிவித்தலுமின்றி ஒரு நாள் வேலைக்கு வராமலிருந்ததையும் அமைச்சர் கண்டுபிடித்துள்ளதாக தெரிகிறது.

## "செல்வத்தில் கிடையாத இன்பம் யோகத்தினால் கிடைக்கிறது"

யாழ்ப்பாணம் வெள்ளி

"ஒரு பிரசவத்தாயின் மகிழ்ச்சியை இன்று நான் பெற்றுள்ளேன். அத்தகைய உணர்ச்சியை எனக்கு ஊட்டியது யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கத்தினரால் உருவாக்கப்பட்ட இம் மண்டபம்'.

இவ்வாறு யோகிராஜ். சுவாமி சச்சிதானந்தஜி நேற்று யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பேசும்போது தெரிவித்தார். இலங்கை திவ்விய ஜீவனசங்கத்தின் போஷகராக சுவாமி சச்சிதானந்தஜியையும் அன்னாரின் அமெரிக்க ஆத்மயோக சீடர்களையும் யாழ்ப்பாணம் திவ்விய ஜீவனசங்கம் வரவேற்றுப் பாராட்டுபசாரம் அளித்தது. இப் பாராட்டு விழா முன்னாள் மாவட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாண முனிசிப்பல் எல்லைக்குள் பேப்பர் சைக்கிளில் டிலிவரி செய்வதற்கு பையன்கள் தேவை. பிணைப் பணம் 500/- கட்டவேண்டும். 125 ரூபா சம்பளம் கொடுக்கப்படும். பிணைப் பணம் கட்டக்கூடியவர் மட்டும் விண்ணப்பிக்கவும். காலை 5 1/2 மணி தொடக்கி 8 1/2 மணி மட்டும் தான் வேலை. நியூஸ் டிஸ்ரிபியூட்டேஸ், பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை, கொக்குவில். 2669

கொழும்பிலுள்ள பிரபல சவர்க்கார உற்பத்தியாளர்களின் தயாரிப்பான 'மெனிக் பார் சோப்' சைக்கிள் மூலம் விநியோகம் செய்வதற்குப் பிணைப்பணம் கட்டக்கூடிய உற்சாகமுள்ள வாலிபர்கள் தேவை. மற்றும் விபரம் நேரில். யாழ். மேர்க்கன்டைல் ஏஜென்ஸீஸ் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 2670

### விற்பனைக்கு

G E C மெயின் றேடியோ பிலிப்ஸ் பற்றறி றேடியோ H. M. V. கிறமபோன் 25 றெகோட்ஸ் சவுண்ட்பொக்ஸ் (Extra) எலக்ரிக் ஸ்திரிக்கை பெட்டி எலக்ரிக் மேசைலாம்பு, ரியூப்லைற். விக்ரேஸ், 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 2671

### கல்வி

ரியூசன்

ஆங்கிலம் ரியூசன்கொடுக்கப்படும். 1971 மார்ச்—டிசம்பர் ஜீ. சி. ஈ. சாதாரண பரீட்சைக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. வி. வி. இராசரத்தினம்B.A.(Lond ) Diploma Education. 44, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். 2674

### வாடகைக்கு

நல்லூர் கோவிலுக்கு நல்லூர் பயிற்சிக் கல்லூரி, கச்சேரி முதலியனவற்றுக்கு அண்மையில் தனி அறைகள் வாடகைக்கு விடப்படும். தேவைப்படுவோர் No. 24, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். 2673

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்விப்பத்திர அறிவித்தல்

1971-ஆம் ஆண்டுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் நடாத்தப்படும் பிரசவ விடுதிகளில் அழுக்குத்துணிகளைச் சலவை செய்வதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 31-1-71-ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்களை 30-1-71-ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ரூபா 50/- வைப்புப்பணமாகவும் ரூபா 5/- கேள்விப்பத்திரப் பணமாகவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

3. இதன்கீழ்க் கையொப்பமிட்டிருப்பவரிடமிருந்து அல்லது மாநகராட்சி மன்றச் சுகாதாரவைத்திய அதிகாரியிடமிருந்து கேள்விப்பத்திரம் பற்றிய ஏனைய சகல விபரங்களையும் நிபந்தனைகளையும் தேவையானோர் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம் ஏ. ரி. சுந்தரம்
மாநகராட்சி மன்ற ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
20-1-71. 2738

### தொடர்ந்து இருள் மயம்

கோப்பாய், வியாமஸ்கெலி-ஒயா மின்சாரம் வட இலங்கைக்கு வந்தும் கோப்பாய் கிராம வீதிகள் இரவு நேரங்களில் இருள்மயமாகவே காட்சியளிக்கிறது. இது குறித்து இப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.


ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜிகணேஷன் -சரோஜாதேவி
நடித்த
அன்பளிப்பு

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் - சௌகார் ஜானகி
நடித்த
சக்கரம்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (கொழும்பு)



சிவாஜி - காஞ்சனா
எம். என். நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த
சிவந்த மண்
(ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்)

கடைசி வாரம்
கிங்ஸ்லி 2-00, 6-00, 9 30
ஏ. வி. எம். ராஜன் வாணிஸ்ரீ சிவகுமார் நடித்த
அன்னையும் பிதாவும்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜோய்முகர்ஜி - சயிராபானு
நடித்த
ஜேய் சிந்தகி ஹிட்னி கிசன் ஹை
(ஹிந்தி - கலர்)

வெல்லிசினிமா
சாவகச்சேரி
தினசரி 2-30, 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
நடித்த
பெண்ணே நீ வாழ்க

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6 30, 10-00 மணி
ராஜ்குமார் - ராதிகா
நடித்த
ஜாக்பாட்டில் ஸி. ஐ. டி. 999

REGAL Jaffna
Daily 4-45 7,9-45 p.m.
Poya days 4 shows
Diana Dors
in
HAMMERHEAD
(colour)


# ஓய்வு பெறும் ஆசிரியர்கள்

### செல்வி சரவணமுத்து

பருத்தித்துறை வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றியவர் செல்வி சரவணமுத்து.

வெறும் குடிசையாக இருந்த வடமராட்சி மகளிர் கல்லூரியை, கோபுரமாக்கியதுடன், கல்வித்தரத்தையும் தனது இடையறாத முயற்சியினால் உயர்த்திய பெருமை செல்வி சரவணமுத்துவுக்கே உரியது. நாட்டுப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்ததன் மூலம் தனது வாழ்வை கன்னியாகவே கழித்தமைக்காக சமுதாயம் அவருக்குக் கடமைப்பட்டுள்ளது' என அவரை சக ஆசிரியைகள் பாராட்டியதிலிருந்து அவரது சேவை அளப்பரியது என நாம் அறிந்துகொள்ளலாம்.

### திரு. இ கதிரேசு

இவர் அராலி சரஸ்வதி வித்தியாசாலையில் 25 ஆண்டுகள் தலைமையாசிரியராகக் கடமையாற்றியவர்.

திரு. கதிரேசு சிறந்த ஆசிரியர் மட்டுமல்ல ஒரு சோதிடர், கிராம வைத்தியர், சமூகத் தொண்டர், புலவர் ஆவர்.

### திரு. கந்தர் கங்கேசு

வேலணை கிழக்கு அரசினர் பாடசாலையில் 25 வருடங்களுக்கு மேல் ஆசிரியராகவும் தலைமை ஆசிரியராகவும் கடமையாற்றிய திரு. கந்தர் காங்கேச அண்மையில் ஓய்வுபெற்றுள்ளார் கல்வித் தொண்டிலும், பொதுத் தொண்டுகளிலும் தமது வாழ்நாளைக் கழித்து மக்களிடையே நற்பெயரைப் பெற்றுள்ள திரு. கார்த்திகேசு தாம் கடமையாற்றிய பாடசாலையை நிறுவுவதற்காக ஆரம்பத்தில் தமது காணியையே கொடுத்துதவி பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்.

### திருமதி இ. உருக்குமணி

வேலணை சரஸ்வதி வித்தியாசாலை ஐயனார் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகவும், அதன்பின் வேலணை அம்பிகை மகளிர் வித்தியாசாலை உதவி ஆசிரியராகவும் கடமையாற்றிய திருமதி இ. உருக்குமணி அண்மையில் ஓய்வுபெற்றுள்ளார்.

### திரு எஸ். விசுவலிங்கம்

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றி அடுத்த மாதம் முற்பகுதியில் ஓய்வு பெறவிருக்கும் திரு. எஸ். விசுவலிங்கத்தின் சேவையைப் பாராட்டி கலாசாலை பழைய புதிய மாணவர்கள் அடுத்த மாதம் 8ந் திகதி பிரிவுபசாரவிழா ஒன்றை நடாத்தவிருக்கின்றனர்.

### பண்டிதர் அ பொன்னுத்துரை

வேலணை சரஸ்வதி வித்தியாசாலை தலைமை ஆசிரியர் பண்டிதர் அ. பொன்னுத்துரை ஓய்வு பெற்றுள்ளார்

வேலணை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தலைவராகவும் ஊர்காவற்றுறை தீவக சமாச நிர்வாகசபை உறுப்பினராகவும் கடமையாற்றி இப்பகுதி மக்களிடத்து நல் மதிப்பைப் பெற்றுள்ளார்.

### திரு. வி. நாகலிங்கம்

1954-ம் ஆண்டு தொட்டு அராலி முருகமூர்த்தி வித்தியாசாலையிலே தலைமையாசிரியராகக் கடமையேற்று 16 வருடங்களாக அவ்வித்தியாசாலையின் வளர்ச்சிக்கும் மாணவரின் உயர்ச்சிக்கும் அரும்பணி புரிந்த திரு வி நாகலிங்கம் ஆசிரியப் பணியினின்றும் ஓய்வு பெற்றார் பாடசாலை முன்னேற்றத்துக்கு அயராது உழைத்த சமய ஞானியும் சமூகத் தொண்டனுமான இவரது தியாக சிந்தையை உள்ளத்தே கொண்ட மாணவர்களும் ஆசிரியர்களும் நன்றி மறவா உரிமையோடு காட்டும் அன்பின் பிரதிபலிப்பாக அவரது சேவையைப் பாராட்டி விழாவெடுத்தனர். பரிசில் வழங்கினர் இவ்வைபவத்திற்கு திரு. ச. மு. பொன்னுத்துரை தலைமை தாங்கினர். தலைவரும் திரு க பொன்னுத்துரை ஆசிரியரும் செல்வி அ பொன்னையா ஆசிரியை உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர்.

பணிவுடைமையையே தமக்கணியாகக் கொண்ட ஆசிரியர் திரு நாகலிங்கத்தின் பிறந்த ஊர் அராலி. சைவசமயத்தைப் பேணிக்காக்கும் பண்பினர். அங்குள்ள சைவ வித்தியாசாலையிலே ஆரம்பக்கல்வி கற்று திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிலே உயர் கல்விபெற்றவர். அராலி வடக்கு ஸ்ரீகணேசவித்தியாசாலையிலே தமது ஆசிரியப் பணியை ஆரம்பித்து சைவவித்தியாவிருத்திச் சங்கப் பாடசாலைகள் 15 வரை கற்பித்த ஆசான் ஆவர்.

ஆசிரியப் பணியுடன் பொதுப் பணியிலும் அதிக ஈடுபாடுடைய இவர், அராலி தெற்கு சமூகசேவா சங்கத்திலும் அராலி விக்கினேஸ்வர ப. நோ. கூ. சங்கத்திலும் தலைவராகவிருந்து அநேக காலமாகப் பொதுப்பணியாற்றி வருகின்றார். அவர் கடமையுணர்ச்சியும் கண்ணியமும் கட்டுப்பாடும் மிக்கவர் என எவராலும் போற்றப்படுவர்.

39 வருடங்கள்வரை ஆசிரியர் தலைமையாசிரியர் பதவியிலிருந்து 57வது வயதில் இளைப்பாறும் அவர் ஆசிரிய உலகிற்கும் கல்வி கற்று முன்னேற விரும்பும் அனைவருக்கும் ஒரு கலங்கரை விளக்கமாகத் துலங்குபவர். அவர் கல்விச் சேவையினின்றும் இளைப்பாறுதல் யாவருக்கும் கவலையளிப்பதாகும்.

—மாணவி

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 22—1—71

(செய்திகள்: காலை 6-45 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அலை 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணிசைத்தமிழ், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அலை 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அலை 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடி விளையாடுபாப்பா.

இரவு 6-10 பொலிஸ் நிகழ்ச்சி, 6-15 வயலின், 6-30 துதிப்பாடல்கள், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிநிகழ்ச்சி, 9-30 உரையாடல், 1-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.

## காமன்வெல்த் மாநாடு

# இந்துசமுத்திர பாதுகாப்பு பற்றி ஆராய எட்டு நாடுகள் குழு நியமனம்

## சர்ச்சைக்குரிய பிரச்னைகளில் சமரச உடன்பாடு

சிங்கப்பூர், ஜன. 21

தென்னுபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் வழங்கும் பிரச்னை சம்பந்தமாக காமன்வெல்த் பிரதமர்கள் ஒரு சமரசமான உடன்பாட்டுக்கு வந்திருக்கிறார்கள்.

இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு சம்பந்தமாக ஆராய்வதற்கென குழுவொன்றை நியமிப்பதென்பதே இந்த சமரச உடன்பாடு. எட்டு காமன்வெல்த் நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய இந்தக் குழு இந்து சமுத்திரத்தின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படும் கருத்துக்கள் பற்றி விரிவாக ஆராய்ந்து காமன்வெல்த் நாடுகளுக்குஅறிக்கை சமர்ப்பிக்கும்.

இந்துசமுத்திரத்தின் பாதுகாப்பின் அடிப்படையிலேயே தென்னுபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் வாங்குவதுபற்றி ஆலோசிப்பதாகக் கூறப்பட்டு வந்திருக்கின்றது.

தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் விற்கும் பிரச்னை மீதான விவாதத்தை நேற்று காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு முடித்துக்கொண்டது.

இப் பிரச்னையில் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் சமரச உடன்பாடொன்றை ஏற்படுத்துவதில் இலங்கையும் இந்தியாவும் பெரிதும் முயற்சி ஒடுத்துக் கொண்டன.

தென்னுபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் விற்கும் விஷயத்தில் சாம்பியா, தான்சானியா, உகண்டா, கென்யா போன்ற ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கடுமையான கருத்துக் கொண்டவர்களாக இருந்தார்கள். எந்தவிதமான சமரசத்துக்கும் அவர்கள் முதலில் இணங்கிப்போக விரும்பவில்லை. நேற்றைய காலைக்கூட்டம் முடிவுற்று பிரதிநிதிகள் வெளியில் வந்தபொழுது தான்சானியா அதிபர் ஜூலியஸ் நைரேரேயிடம் நிருபர்கள் "இன்று காலை நடந்த கூட்டம் குறித்து நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்களா?" என்று கேட்டனர்.

"என்னைப் பார்த்தால் மகிழ்ச்சியாகவா தெரிகிறது" என்று அவர் திருப்பிக்கேட்டார்.

## இந்தியாவும் வெளியேறும்?

பிரிட்டன்தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பதற்கு முடிவெடுத்தால் காமன்வெல்த்திலிருந்து வெளியேறும் விஷயம் பாரதூரமாக ஆலோசிக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்ருகவிருக்குமாம்.

இத் தகவலை இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. சுவரண்சிங் வெளியிட்டார், பத்திரிகைநிருபர்களின் சரமாரியான கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

இப் பிரச்னை மீது பிரிட்டன் தொடர்ந்து அதன் பழையநிலையை வலியுறுத்துமானல் மற்றநாடுகளுடன் சேர்ந்து இந்தியாவும் வெளிநடப்பு செய்யுமா என்று நிருபர்கள் கேட்ட கேள்விக்கு திரு. சுவரண்சிங் முதலில் பதிலளிக்கமறுத்துவிட்டார். நிருபர்கள் தொடர்ந்து வற்புறுத்தவே, "அப்படியான ஒரு நிலை ஏற்படுமானல் பல நாடுகள் தாம் காமன்வெல்த்திலிருப்பதினல் ஏதும் அர்த்தமுண்டா என்பது பற்றி ஆலோசிக்கக் கூடும். இதில் நாங்கள் அப்பாற்பட்டவர்களல்ல" வென்று அவர் குறிப்பிட்டார்.

## ஒரிஸ்ஸா சட்டசபை கலைக்கப்படும்

புதுடில்லி, ஜன. 21

ஒரிஸ்ஸா மாநில சட்டசபையைக் கலைத்து விடும்படி ஒரிஸ்ஸா கவர்னர் டாக்டர் அன்சாரி ஜனதிபதிக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

ஒரிஸ்ஸாவில் இரண்டாவது உருக்குஆலையொன்றை நிறுவும்படி முன்னுள் முதலமைச்சர் திரு சிந்தியோ பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியைக் கேட்டுக் கொண்டுள்ளார். பிரதம மந்திரி திருமதி காந்தி புவனேஸ்வரில் நேற்று கூட்டமொன்றில் பேசுகையில் உரிய சந்தர்ப்பம் வரும்போது ஒரிஸ்ஸாவில் உருக்கு ஆலை நிறுவுவது பற்றி ஆலோசிக்கப்படும் என்று கூறினர்.

## அப்பலோ-14 விமானிளுக்கு தடுப்பு

கென்னடிமுனை, ஜன. 21

அப்பலோ-14 விண்வெளி விமானிகள் மூவரும் இப்பொழுதிருந்தே ஓரளவு தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சந்திரனை நோக்கி இம் மாதம் 31-ம்தேதி புறப்படுவார்கள். பிறருடன் தொடர்பு கொள்வதின் மூலம் நோய்கள் தொற்றக்கூடும் என்பதால் இவர்கள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்வது ஓரளவு தடுக்கப்பட்டுள்ளது.

## பெற்ருர் தினவிழா

கோப்பாய், வியா

கோப்பாய் நாவலர் பாடசாலையில் பெற்ருேர் தினவிழா சிறப்பாக நடைபெற்றது. தலைமையாசிரியர் திரு. எம். வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பாடசாலைமாணவ மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## அவாமி லீககிகு 20 பெரும்பான்மை

டாக்கா ஜன.21

பாகிஸ்தான் தேசிய சட்டசபையில் அவாமி லீக்கிற்கு 20 இடங்கள் பெரும்பான்மை கிடைத்துள்ளது. 300 இடங்களைக் கொண்ட தேசிய சட்டசபையில் பெரும்பான்மை இடங்கள் அவாமி லீக்கிற்கு உண்டு.

தேசிய சட்டசபை கூடும்பொழுது பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 13 இடங்களும் நிரப்பப்படும்.

## சபை நிறுவ முயற்சி

உடுப்பிட்டி, வியா

துன்னலை தெற்கில் குற்றத் தடுப்புசபை யொன்றை நிறுவ அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகா சபை நிர்வாகக் காரியதரிசி திரு சி. செல்லையாவும். சமாதானநீதிபதி திரு. ஆ. குலேந்திரமும் ஈடுபட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடியிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து அவர் நீதியமைச்சுடன் தொடர்பு கொண்டு துன்னலை தெற்கில் குற்றத் தடுப்புச் சபை அமைக்கவேண்டிய அவசியம்பற்றி வலியுறுத்தியுள்ளார்.

# பத்திரமாக திரும்புவதில் அப்பலோ-14 வீரர் நம்பிக்கை

ஹூஸ்ட்டன் (டெக்ஸாஸ்) ஜன 21

அம்புலிப்பயணம் நெருங்க நெருங்க' அப்பலோ-14 விண்வெளி விமானிகளிடம் நம்பிக்கையும் அமைதியும் ஒளி வீசுவதைப் பார்க்கமுடிறது. மூன்று தொழில் அதிபர்கள் தொழில்காரணமாக நீண்டபயணம் ஒன்றைமேற்கொள்கையில் எப்படி இருப்பார்கள்? அப்படித் தோற்றமளிக்கின்றனர் அப்பலோ-14 விண்வெளி விமானிகள், ஜனவரி 31ம் தேதி இவர்கள் அம்புலிக்குப் புறப்படுகின்றனர்.

டெக்ஸாஸ் மாநிலத்திலே ஹூஸ்ட்டன் நகரில் இருக்கும் விண்வெளி நிலையத்தில் இந்த மூன்று விமானிகளுக்கும் பயிற்சி நடந்து வந்தது. விண்வெளிப்பயணத்திற்கு முன்னர் விமானிகள் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசுவது ஒரு மரபாகிவிட்டது. இந்தமரபினையொட்டி அப்பலோ-14 விமானிகளும், உலக செய்தித்தாள் நிருபர்களையும், பத்திரிகை, றேடியோ, டெலிவிஷன் பிரதிநிதிகளையும் ஜனவரி 9-ம் தேதி சந்தித்தனர்.

இதுவரை விமானிகள் சென்ற23 விண்வெளிபப்யணங்களை அமெரிக்கா நடத்தியிருக்கிறது. அப்பலோ-14 24-வது பயணமாகும்.

விண்வெளி நிலையத்தின் முக்கிய மன்றத்திலே விண்வெளிவிமானிகள் செய்தியாளர்களையும் பிரதிநிதிகளையும் சந்தித்தனர். மேடையில் விமானிகள் அமர்ந்திருந்தனர். வலப்புறம தலைமை விமானி ஆலன் பி ஷெப்பர்டு. நடுவில் தாய்க்கப்பல் விமானி ஸ்டூவர்ட் ஏ ரூஸா, இடப்புறம் நிலாவூர்தி விமானி எட்கர் டி. மிச்சல்.

செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர்கள்மிக உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் பதிலளித்தனர். பேட்டி 45 நிமிடம் பிடித்தது.

அவர்கள் உணர்ச்சி எதையும் காட்டிக் கொள்ளாமலே பேசினர். இந்த விண்வெளிப் பயணத்தில் இருக்கும் ஆபத்துக்களையும் இப்பயணத்தினல் மக்கள் குலத்துக்கு ஏற்படும்நன்மைகளையும் குறித்து அவர்கள் விரிவாகவே பேசினர். பலதடவை அவர்கள் வேடிக்கையாகவும் பேசினர்.

ஷெப்பர்ட்47வயதானவர் மிச்சலுக்கு 40 வயது இவர்கள்தான் விண்வெளியில் பறக்கும் வயதானவர்கள் என்றும் அம்புலியில் உலாவும் வயதானவர்களும் இவர்களேயாவார் என்றும் கூறப்பட்ட போது தான் வேடிக்கைப் பேச்சு நிகழ்ந்தது; 37 வயதான ரூஸா, தாய்க்கப்பலில் அம்புலியை வட்டமிட்டுக் கொண்டிருக்க ஷெப்பர்டு, மிச்சல் ஆகிய இருவரும்தான் அம்புலியில் உலாவுவார்கள்.

'விண்வெளியின் தாத்தா' என்று ஷெப்பர்ட்-ஐ ஒரு நிருபர் கூறிய போது சிரிப்பொலி கிளம்பியது. அம்புலிக்கு அவர்தான் நடுத்தர வயதினரைக் கொண்டு போகிருர் என்று நினைவூட்டினுர் இந்தநிருபர் பின்னர் வேறு ஒரு நிருபர் ஷெப்பர்டு இடம் பேசும்போது ஷெப்பர்டு, மிச்சல் ஆகிய இருவரும் அம்புலியில் இதுவரை எந்த மனிதனும் பார்த்திராத மிகத் தொன்மையானபாறைகளைப்பார்க்கப் போகிருர்களா என்று கேட்டார். 'ஆம் நாங்கள் தான்மிகச்சிறந்தவிண்வெளி வீரர்களுங்கூட' என்று ஷெப்பேர்ட்பதில் சொன்னதும் உடனே சிரிப்பொலிகிளம்பியது.

(6-பக்கம் பார்க்க)

# எல்லை விஸ்தரிப்பை நிறுத்தினுல் சண்டையை நிறுத்த தயார்

## அரபுக் குடியரசின் மாற்றுத் திட்டம்

நியுயோர்க், ஜன 21

மேற்காசிய அமைதிக்கென ஐக்கிய அரபுக்குடியரசு ஆறு அம்சங்களைக் கொண்ட திட்டமொன்றை டாக்டர் ஜாரிங்கிடம் சமர்ப்பித்துள்ளது.

இஸ்ரேல் அரசு ஏற்கவே தாக்கல் செய்துள்ள அமைதித் தீர்வுக்கான திட்டத்தை ஐக்கியஅரபுக் குடியரசு நிராகரித்துவிட்டது. அதற்குப் பதிலாக புதிய திட்டமொன்றை அது இப்பொழுது கொடுத்திருக்கின்றது.

எல்லைகளை விஸ்தரிப்பதில்லை என்றும் 1967-ம் ஆண்டுக்கு முந்திய எல்லைகளுக்கே திரும்புவதென்றும் இஸ்ரேலியர் வாக்குறுதியளித்தால் சண்டை தொடுப்பதில்லை என்று உத்தரவாதமளிக்கத் தயாராகவிருப்பதாக ஐ. அ. குடியரசு அறிவித்திருக்கின்றது.

மேற்காஸியாவில் அமைதியைப் பாதுகாக்கும்நான்கு வல்லரசு படையொன்றை நிறுத்துவதற்கு இணங்குவதுடன், பாலஸ்தீன அகதிகளுக்கு இஸ்ரேலியர் மறுவாழ்வளிப்பது அல்லது அவர்களுக்கு நஷ்டம் வழங்குவது போன்றவிதத்தில் அப்பிரச்னை தீர்க்கப்பட வேண்டுமென்றும் எகிப்து தனது திட்டத்தில் தெரிவித்திருக்கின்றது.

மத்தியதரைக்கடலிலும் இதர நீர்ப்பிரதேசங்களிலும் சகல சங்கங்களும் சுதந்திரமாகப்போய் வருவதை உறுதிப்படுத்தும் பாதுகாப்புசபையின் தீர்மானத்துக்கமைய நடக்கவும் எகிப்பு சம்மதம் தெரிவித்துள்ளது.

அமைதியை ஏற்படுத்துவதற்கு பாதுகாப்பு சபை தன்னுலான முயற்சிகள் யாவும் எடுக்க வேண்டும் என்று கூறியுள்ள ஐக்கிய அரபுக் குடியரசு, அமைதியைப் பராமரிப்பதற்கு மட்டுமன்றி, தாக்குதல்களைத் தடுக்கும்விதத்தில் தலையிடுவதற்குமாக நான்கு வல்லரசு படையொன்றை அனுப்பிவைக்க வேண்டுமென்றும் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலியரின் அமைதித் திட்டத்துக்கு எகிப்தியர் தெரிவித்துள்ள மாற்றுத்திட்டம்பற்றி இஸ்ரேலிய மந்திரிசபை நேற்றுக் கூடி ஆலோசனை செய்தது.

மணிவாக்கு

அறியாமை இருட்டிலே மூழ்கி ஆயிரம் ஆண்டுகள் வாழ்பவனை விட அறிவுள்ள மனிதனாக ஒருநாள் வாழ்பவனே மேலானவன். — புத்தர்.

ஈழநாடு

[illegible] Jaffna Daily
Telegrams: "EELANADU" Jaffna
[illegible] Box 49, Jaffna. Telephone: 289

[illegible] தை மாதம் 9-ந் திகதி (22-1-71)

# அரசியல் அமைப்பும் அடிப்படைத் தீர்மானங்களும் - 3

ஒன்று, இரண்டு, மூன்று என நீண்டு கொண்டே போகிறதென்று உங்களில் சிலருக்கு அலுப்புத் தட்டுகிறதா? மிக முக்கியமான ஒரு விஷயத்தில் அதுவும் நாட்டின் சரித்திரத்தையே மாற்றியமைக்கவிருக்கும் புதிய அரசியல் அமைப்பு சம்பந்தமான விஷயத்தில் சுட்டிக்காட்ட வேண்டியதை சுட்டிக் காட்டியும் தொட்டுக்காட்ட வேண்டியதை தொட்டுக்காட்டியும் எடுத்துக்காட்ட வேண்டியதை எடுத்துக்காட்டியும் மக்களின் கவனத்தை அதன்மூலம் மக்கள் பிரதிநிதிகளின் கவனத்தையும் ஈர்க்கச் செய்யவேண்டிய கடமையும் பொறுப்பும் எங்களுக்கிருப்பதாக உணர்கிறோம். கடந்த இரண்டுதினங்களாக வெளிவந்த தலையங்கங்களில் அரசியல் அமைப்புக்கான அடிப்படைத் தீர்மானங்கள் சிலவற்றின் முக்கிய அம்சங்களைச் சுட்டிக் காட்டியும் தொட்டுக்காட்டியும் விட்டபின் பொதுவாகச்சில அம்சங்களை எடுத்துக் காட்டுவதுடன் இத்தொடர்த் தலையங்கத்தை இன்றுடன் நிறுத்திக் கொள்ள உத்தேசித்துள்ளோம்.

'மக்களின் கலாச்சாரங்களையும் மொழிகளையும் அபிவிருத்தி செய்ய அரசு உதவிபுரிதல் வேண்டும்.

சட்டத்தின் முன்பு எல்லோரும் சமமானவர்கள். அவர்கள் சமமான பாதுகாப்புக்கும் உரிமை உடையவர்கள். பேச்சுச் சுதந்திரம் கருத்துச் சுதந்திரம் சார்பான உரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் இருக்க வேண்டும்.'

இந்த அம்சங்கள் பற்றி யாரும் குறை சொல்வதற்கு இடமில்லை இவை மட்டுமல்ல சுரண்டலை ஒழிக்கவும் நாட்டின் சுயாதிபத்தியத்தைப் பாதுகாக்கவும் ஐக்கிய பிரதேச ஒற்றுமை ஆகியவைகளின் பாதுகாப்பு சம்பந்தமான தீர்மானங்களும் வரவேற்கப்படவேண்டிய அம்சங்களே.

நம்நாட்டில் இப்போது பின்பற்றப்பட்டுவரும் நீதிபரிபாலன சேவை பற்றி ஆட்சிமன்றத்தினுள்ளே சில சில சமயங்களில் குறை கூறப்பட்டு வந்திருக்கிறது. அயல் நாடான இந்தியாவில் ஆட்சிமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் உருவாக்கிய- மக்களின்விருப்பத்துக்கேற்ப மக்களுக்காக- கொண்டு வரப்பட்ட சட்டங்களையே உயர் நீதிமன்ற நீதிபதிகள் நிராகரித்திருக்கின்றனர். ஆட்சிமன்றத்திற்கு அதிகாரம் அதிகமா உயர்நீதி மன்றத்திற்கு அதிகாரம் அதிகமா? இது இந்திய நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வரும் சர்ச்சை. இப்பொழுது அங்கு நடைபெறவிருக்கும் இடைத்தேர்தல் இதற்கு ஒரு தீர்வுகாண வழிவகுக்கலாம். என்றாலும் நாட்டின் முன்னேற்றத்துக்கும் மக்கள் அளித்த கட்டளையை நிறைவேற்றவும் இந்த சர்ச்சை இடையூறாக இருந்துள்ளது என்பது உண்மையே.

இந்த வகையில் புதிய அரசியலமைப்புக்கான அடிப்படைத் தீர்மானங்களில் தேசிய சபைக்கே சட்டத்தை ஆக்கும் அதிகாரத்தையும் சட்டத்தையோ சட்ட திருத்தத்தையோ நிராகரிக்கும் அதிகாரத்தையும் வழங்கியிருப்பது வரவேற்கத் தக்கது.

புதிய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதும் இப்போதுள்ள மக்கள் பிரதிநிதிகள் சபையே தேசிய சபையாகப் பதவியேற்கும். தேசிய சபையின் ஆயுட்காலம் ஆறு வருடங்களாக இருக்குமென்பது அடிப்படைத் தீர்மானங்களில் ஒன்று.

இப்போது ஆட்சிமன்றத்தின் ஆயுட்காலம் ஐந்துவருடங்களாகும். தேர்தலில் ஈட்டிய வெற்றியைக் கொண்டாடுவதில் முதலிரண்டு வருடங்களும் அடுத்த தேர்தலுக்கான ஆயத்தங்களில் கடைசி இரண்டு வருடங்களும் செலவழிந்து விடுவதால் ஆட்சிபீடத்திற்கு வரும் அரசாங்கம் எதுவும் தனது திட்டங்களையோ வாக்குறுதிகளையோ நிறைவேற்றுவதற்குப் போதிய அவகாசமில்லாதிருக்கிறது' என்று முன்னைய அரசாங்கத்தில் ராஜாங்க மந்திரியாக இருந்த திரு ஜே. ஆர். ஜயவர்த்தன ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார். இக்கருத்தைமற்றும் பலரும் ஏற்றுக்கொண்டனர் எனவே தேசிய சபையின் ஆயுட்காலத்தை ஆறு வருடமாக்குவதற்கு ஆட்சேபமிருக்குமென எதிர் பார்க்க முடியாது. அது அவசியமாகவும் தோன்றவில்லை.

ஆனால் இப்போதுள்ள மக்கள் பிரதிநிதிசபை, அதாவது அரசாங்கம் புதிய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரும் ஆறு வருடங்கள் ஆட்சிபீடத்திலிருப்பதானால் அதன் காலஎல்லை நீண்டுவிடும்:

எந்தவொரு அரசாங்கமும் ஆட்சிபீடத்தில் நீண்டகாலம் அமர்ந்திருப்பது அதுவும் குறிப்பாக ஒரு ஜனநாயக நாட்டிலிருப்பது பல துறைகளிலும் ஊழல்கள் மலியவும் இதன் மூலம் மக்களுக்கு அலுப்பும் சலிப்பும் ஏற்படவுமே வழிவகுப்பதாக இருக்கும் எனவே புதிய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதும் அதற்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவது நியாயமான செயலாகவே அமையும்.

இந்த அடிப்படைத் தீர்மானங்களுக்குத் திருத்தம் கொண்டு வருவதற்கு அரசியல் விவகார அமைச்சர் வாய்ப்பளித்திருக்கிறார். சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டுப் பினனர் கவலைப்படுவதிலும் ஒருவர்மீதுஒருவர்குறை கூறிக் கொண்டிருப்பதிலும் யாருக்கும் நன்மையுமில்லை; இலாபமுமில்லை.

## எதிர்ப்பு

நயினாதீவு, வியா

நயினாதீவு கிராமசபையால் நயினாதீவு மகாவித்தியாலயத்துக்கு ஒருபட்டதாரி ஆங்கில ஆசிரியரை நியமிக்கும்படி அரசினரை கேட்டுக்கொண்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து நயினாதீவு மகா வித்தியாலயத்தில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

# சோஷலிஸமும் சமஷ்[டியும்]

இணைப்பாட்சி எனப்படுகிற சமஷ்டி ஆட்சிமுறைதான் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழுகின்ற இலங்கையைப் போன்ற ஒரு நாட்டுக்கு மிகப் பொருத்தமானது என்று இலங்கைத் தமிழரசுக்கட்சி சொல்லி வரும் கருத்து அவர்களால் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் தத்துவமும் அல்ல. கம்யூனிஸ்ட் கட்சி ஏற்க முடியாத கருத்துமல்ல. தமிழரசுக்கட்சி உருவாகு முன்பே இக் கருத்து ஏற்கப்பட்டு நடைமுறையிலும் சோசலிச நாடுகளில் செயற்படுத்தப்பட்டு வெற்றி காணப்பட்டது. தமிழரசுவாதிகளுக்கும் சோசலிசவாதிகளுக்கும் ஏற்பட்டுள்ள கருத்துமோதல் ஒரு நாட்டின் உடைவு எந்தக் காலகட்டத்தில் இணைப்பாட்சி உருவாக்கப்பட வேண்டும் என்பதே ஆகவே சோசலிச நாடுகளின் கம்யூனிசத்தை ஏற்கும் தோழர்கள் அதே நாடுகளின் சமஷ்டி முறையை ஏன் இங்கும் ஏற்கமுடியாது என ஒரு சாரார் எழுப்பிவிடும் பிரச்னைக்கு ஏற்ற பதிலும் சோசலிசத்துக்குப் பின் சமஷ்டியா, சமஷ்டிக்குப்பின் சோசலிசமா என்ற கேள்விக்குள் மறைந்துகிடக்கிறது.

ருஷ்யா, செக்கோஸ்லேவேக்கியா போன்ற கம்யூனிஸ நாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்குப் பின் ஏற்பட்ட இணைப்பாட்சியுடன், பொருளாதார வளர்ச்சியும், சமுதாய மாற்றங்களும் ஏற்படாத இந்தியா போன்ற நாடுகளில் உருவாக்கப்பட்ட இணைப்பாட்சியை இங்கே ஒப்பிட்டுப்பார்த்தல் நல்லது. சோசலிசம் முழுமையாக மலராத அமெரிக்கா, கனடா, இந்தியா போன்ற நாடுகளில் இணைப்பாட்சி பொருளாதார வீழ்ச்சியையும், மனிதனை மனிதன் இனத்தை இனம் சுரண்டும் போக்கையும் வளர்த்தே வந்திருக்கிறது. மொழிப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்களுடன் சுடுபட்டு பிணமாக வீழ்ந்த மாணவர்தலைவன் ராஜேந்திரன் பிறந்தஇந்தியநாடும், இனப்போராட்டத்தில் துப்பாக்கிக்குண்டுக்கு இரையாகி துடிதுடித்துச் செத்த நீக்ரோ மக்களின் தலைவன் லூதர் கிங் பிறந்தஅமெரிக்க நாடும், ஆங்கில பிரஞ்சு மொழி வெறியால் தீப்பற்றி எரிந்த கனடா நாடும் இணைப்பாட்சியிலே தான் இயங்கி வருகின்றன.

வெள்ளைக்காரன் இந்த நாட்டைக் கொள்ளையடித்து முடிந்ததும் எந்தவகையான அரசியலமைப்பைக் கொடுத்துவிட்டு வெளியேறலாம் என சோல்பரி கொமிஷன் மூலம் கேட்டபொழுதும் இதே தமிழரசுக்கட்சியினர் வாதத்திறமைபெற்ற வக்கீல்களாகவே இருந்தனர். அப்பொழுது விரும்பாத இணைப்பாட்சி இப்பொழுது அரசியல் பிரச்னையாக்கப்பட்டது ஏன்?

எந்தநாடும் ஆண்டாண்டு காலமாக இனிய உணவு, இன்பவாழ்க்கை, இல்லறசுகம், எல்லாவற்றையும் உடம்பை வருத்தாது மக்களைச்சுரண்டி வாழ்ந்துவந்த கூட்டத்தினருக்குப் பாதகமான கம்யூனிச பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறபொழுது அதனால் பாதிக்கப்பட்டவர்கள் தேசிய இனப்பிரச்னைகளையே முட்டுக்கட்டைகளாகப் போடுகிறார்கள். இவ்வழியே இந்த நாட்டில் தோன்றிய பிரச்னைதான் சமஷ்டிக் கோரிக்கை எனவே சோசலிச வளர்ச்சிக்கு தடையாக சமஷ்டிக்கோரிக்கையை பிரயோகிப்பவர்களுக்கு சோசலிசத்துக்குப்பின் சமஷ்டி ஏன்? பிறகு அது பயனற்றதாகிவிடுகிறது.

இணைப்பாட்சி என்பது போராடிப்பெறும் தனியாட்சி அல்ல. அது பெரும்பான்மை மக்களின் ஒத்துழைப்புடனும் நல்லெண்ணத்துடனும் கேட்டுப் பெறும் ஆட்சிமுறை. ஒருசிலரின் உயிர்த்தியாகத்தால் பெறக்கூடிய தனியாசியை வெறுத்து என்றுமே எதிர்த்துப்பெற முடியாத இணைப்பாட்சியை கெட்டியாகப் பிடித்திருப்பதன் காரணம் பிரச்னை தீர்ந்துவிட்டால் நோக்கம் நிறைவேறுது என்ற அச்சமே.

முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ அமைப்பு முறையே பாராளுமன்ற முறை. இந்த அமைப்பு முறையிலே இனஒதுக்கல் போன்ற தேசிய இனப் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியுமென்றால் லெனினும், மாசேதுங்கும் ஆயுதம் தாங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆயுதப் புரட்சி மூலம் உருவாக்கப்படும். தொழிலாள வர்க்கத்தின் சர்வாதிகாரப்பிடியிலிருந்து நாடு தளர்த்தப்படும்பொழுது தேசிய இனப் பிரச்னை மீண்டும் தலைதூக்குகிறது. இதைத்தான் அலெக்சான்டர் டுப்செக்கின் தலைமையில் செக்கோஸ்லேவாக்கியா இரத்தக் கண்ணீர் விட்டு அநுபவித்தது.

பாராளுமன்ற முறையில் மட்டும் நம்பிக்கை வைத்திருக்கும் கம்யூனிஸ்டுகளிடையே தோன்றியிருக்கும் புதிய கருத்து இந்தக்கட்டத்திலே கவனத்திற்குரியது. முதல் எதிரியை ஒழித்திட இரண்டாவது எதிரியுடன் கூட்டுச் சேர் என்பதே இந்தக்கருத்தாகும். இக்கருத்தின் அடிப்படையில் காங்கிரஸ் கட்சியுடன் உறவாடுவதால் காங்கேசன் துறைத் தொகுதியைப் பிடித்திடலாமே யொழிய கம்யூனிசத்தைப் பிடித்திட முடியாது.

1956-ம் ஆண்டில் தமிழரசுக்கட்சியுடன் உறவாடி காங்கிரசை வீழ்த்துவதும், 1970-ம் ஆண்டில் காங்கிரசுடன் கூட்டுச்சேர்ந்து தமிழரசை வீழ்த்துவதும் தான் கம்யூனிச லட்சியமாக இருந்தால தேசிய இனப் பிரச்னைக்கு முடிவேகிடையாது. ஏனென்றால் காங்கிரஸ் கட்சியும் தமிழரசுக் கட்சிபோலவே தேசிய இனப்பிரச்னையை மூலதனமாக வைத்து அரசியல் வியாபாரம் நடத்துகிறது. தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் உருவாகிவரும் இன்றைய முக்கிய திருப்பத்தில் லெனின் கூறிய வார்த்தைகளை நாம் மறந்துவிடக்கூடாது. "ஒரு கம்யூனிஸ்ட் மாற்றுக்கட்சிக்காரனுக்கு செய்யும்உதவி சாகப் போகிறவனின் தாகத்திற்கு நஞ்சுபருக்குவதுபோல இருத்தல்வேண்டும்." என்பதே அந்தவார்த்தைகள்.

ஜனநாயகம், தனி நபர் சுதந்திரம் போன்றவை பணக்காரனுக்கும் ஏழைக்கும், முதலாளிக்கும், தொழிலாளிக்கும் பண்ணையாருக்கும் உழவனுக்கும் ஏற்பட்டிருக்கும் வர்க்கப்போராட்டத்தில் மிகப் பெரிய முக்கியத்துவம் பெறும் அம்சங்களாகும். உண்மையான தனி நபர் சுதந்திரமென்பது பணக்காரனின் பிடியிலிருந்து ஏழையும், முதலாளியின் பிடியிலிருந்து தொழிலாளியும் பண்ணையாரின் பிடியிலிருந்து உழவனும், நிலச்சுவான்தாரிடமிருந்து குடியிருப்பாளனும் விமோசனம் பெறுவதையே குறிக்கிறது. சுரண்டல், ஆன்மீக ஒடுக்கு முதலிய முறைகளிலிருந்து உழைத்துப் பிழைப்பவர்கள் விடுதலை பெறுவதையே குறிக்கிறது. தனிநபர் சுதந்திரத்தை வர்க்க நிலையில் இருந்து அணுகும்பொழுது இது மக்களின் ஒற்றுமையை வளர்ப்பதற்கும். மக்களிடையே சோசலிச சித்தாந்தத்தை பரப்புவதற்கும் தேவையான முக்கிய அம்சம் எனத்தெரிகிறது.

சோஷலிஸ எதிர்ப்புப் பிரசாரத்திற்கான சுதந்திரத்தையும், எதிர்ப் புரட்சிச் சக்திகளின் அமைப்புச் சுதந்திரத்தையும் தனிநபர் சுதந்திரமாகக் கருதமுடியாது.

ஜனநாயகம் என்பது தனது வாக்குப் பலத்தில் தங்கியிருக்கும் அரசை ஏற்றுவதும் இறக்குவதும் அல்ல. அது ஒரு மக்கள் சக்தி. உற்பத்திச் சாதனங்களைப் பொதுவுடைமையாக்கி அதன் அடிப்படையில் இன மத வேறுபாடு இன்றி எல்லோருக்கும் சமத்துவமான உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் சக்தியே ஜனநாய[கம்]...

சுரண்டுபவரும் [illegible]
படுபவரும் இல்லா[த]
டிலே, பொருளாதா[ர]
வம் எல்லாம் நாட்[டு]
ளின் கட்டுப்பாட்டி[ல்]
நாட்டிலே, உற்பத்[தி]
னங்கள் பொது[வுடைமை]
யாக்கப்பட்டுள்ள ந[ாட்டில்]
தான் உண்மையா[ன ஜன]
நாயகம் மலருகிற[து].
எனவே பாரா[ளுமன்ற]
முறையினால் [illegible]
சமுதாயத்தை [illegible]
கவோ, ஜனநாய[கம்]
தனிநபர் சுதந்தி[ரம்]
பேணிக் காத்திட[...]

வி. அரியரத்[தி...]

யாது சட்டங்கள் [illegible]
பணக்காரத் து[illegible]
தின் கொட்டத்தை [illegible]
முடியாது தண்டு[illegible]
தைக் காண்கிறோம்.
சுரைக்காய் கறிக்[கு]
நாட்டின் பிரச்[னை]
வெறும் சட்டங்க[ள்]
டும் மாற்றிட[...]
இந்த நாட்டில் ஏற்[பட்ட]
அரசியல் [illegible]

சமஷ்டிககுப்பின் சோஷலிஸமா சமஷ்டியா? என்ற கேள்வி [illegible]யக்கே[...]
ஏ.சின்னத்தம்பி என்பவர் இம்மாத[...]
திரிகையில் தமது கருத்தையும் [...]
இருவர் இவ்விஷயமாகத் தெரிவித்[...]
டுகிறோம்.

# சோஷலிஸமும் இணைந்து பெற[...]

இலங்கையிலுள்ள தமிழ் பேசும் பெருங்குடி மக்கள் தமக்கென ஒரு மொழியைப் பேசி, தமக்கேயுரித்தான தமிழ்க்கலை, தமிழ்க்கலாச்சாரம், தமிழ்ப்பண்பாடு ஆகியவற்றைப் பேணிக்காத்து நம்மவர் பிரதேசத்து, நம்மவர் மொழியில், நம்மவர் ஊர்விவகார ஆட்சிகளை அமைத்து, மறுபுறத்தேயமைந்துள்ள சிங்களப் பேரரசுடன் சினேகமாக வாழ ஏற்ற ஒரே மார்க்கம், சாலச் சிறந்த சமஷ்டி அரசமைப்பு என்பதை உலகச்சரித்திர வரலாறு சான்று பகர்ந்து நிற்கின்றது.

நீயும் வாழ்; உன்மொழியைப் பேணு; உன்பிரதேசத்தை வளப்படுத்து; உன் கலைகளைப் பேணு; அதேநேரத்தில் எம்மையும் வாழவிடு; எம் கலையைக், கலாச்சாரத்தைக் கொல்லாதே; சுருங்கக் கூறின் வாழு, வாழவிடு, இதையே இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்று நேற்று அல்ல், கடந்தஇருபது ஆண்டுகளாகக் கூறிவருகின்றது.

இந்த அடிப்படைத் தத்துவத்தைத் தந்தை செல்வநாயகத்தார்தன்கற்பனை உலகில் காணவில்லை. அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகள்முதல் சோஷலிசமணம் வீசும் ருஷ்யா நாடுதொட்டு சுவிற்சர்லாந்து வரையுள்ள மிகச் சிறிய நாடுகளில், மொழிவாரி சிறுபான்மையினத்துப் பிரச்னைகளைத் தீர்த்துவைத்த மாமருந்து சமஷ்டியெனில், அது சாலப் பொருந்தும்.

இனிநம் நாட்டு சோஷலிசத்துக்கு நாம் வருவோம். ஐ.தே. கட்சியைவிட, ஐ. முன்னணி அதிகம் சோஷ[லிச]...

விசுவயமா[illegible] என்[...]
னல், அந்[illegible] சோ[...]
உண்மையிலேயே
உருக்குலைத்துவிடும்.
ணத்திற்கு ஒ[...]
சொல்லுகிறேன்.
மாணவர்களை நிற[...]
ருந்தும் ஒதுக்கித[...]
சோஷலிசமா? தமிழ்[...]
உத்தியோகங்களில் [...]
தாது மொழியின் [...]
விரட்டியடிப்பது [...]
சமா? இந்த நாட்டு[...]
மக்களை வந்தேறுகுடி[...]
வர்ணித்து, உரிமை[...]
சலுகை தானும் [...]
குச் சம்மதம் இல்லை[...]
பது சோஷலிசமா?
கிழக்கு மாகாணத்தி[...]
கின்ற பல [illegible]ட்சம் [...]
களும் சிங்கள[...]

மு. திருநாவுக்[கரசு]

கோட்டு மொழியாக[...]
வேண்டும் என்று [...]
தும் சீரான சோஷ[...]
விடுமா? வெளிநா[...]
ந்து வருகின்ற தமி[ழ்...]
கள், சஞ்சிகைகள் [...]
தையுமே தடைசெய்[...]
வுப் பசியை அடக்[...]
சோஷலிசமா?
சுருங்கச் சொன்[னால்...]
பித்தவறித் தமிழ்த்[...]
வயிற்றில் பிறந்த [...]
காரணத்தால் ஒட்ட[...]
ஓட்டி அடிக்கின்ற [...]
யினை நிற[illegible]றியால் [...]
வெறியால் இனவெ[றியால்...]
மொழிவெறியால் [...]
தமைக்கூறுபோட்டு [...]
சிக்கும் ஆட்சியினை[...]
நிமிர்த்தி நிகரான[...]
விசம் என்று முழு[...]
ஏற்குமோ இன[...]
கார்ள்மார்க்ஸ்சம்[...]

# ...ஷ்டியும்

...டுத்தும் மக்கள்
...னநாயகம்
...வரும் சுரண்டப்
... இல்லாத நாட்
...ருளாதாரச் செல்
...ம் நாட்டு மக்க
...பாட்டில் உள்ள
... உற்பத்திச் சாத
...பொதுவுடைமை
...டுள்ள நாட்டிலே
...மையான ஜன
...லருகிறது.
... பாராளுமன்ற
... சோஷலிஸ
...த்தை உருவாக்
...ஜனநாயகத்தை,
... சுதந்திரத்தைப்
...த்திடவோமுடி

## ...யரத்திலும்

...ங்கள் எல்லாம்
... துரைத்தனத்
...த்தை எதிர்க்க
...ண்டுதண்டாவ
...கிறோம். ஏட்டுச்
... கறிக்குதவாது.
...ரச்னைகளை
...டங்களால் மட்
...ற்றிடமுடியாது.
...ல் ஏற்பட்டுள்ள
...றங்கள்...லை

பல திட்டங்களை மசோதாக்களாகவும், நிர்வாகப் பணிப் புகளாகவும், அறிக்கைகளாகவும் அச்சடித்துக் குவித்துக்கொண்டேயிருக்கிறது. ஆனால் தொழிலாளி விவசாயி வர்க்கத்தினிடையே, கிராமவாசிகளிடையே இவற்றின் பிரதிபலிப்பைக் காணமுடிவதில்லை.

இந்த நிலைக்குக் காரணமென்ன?

இந்த நாட்டில் சோஷலிஸக் கருத்துக்கள் மலர்ந்திருக்கின்றனவே யொழியப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகார ஆட்சி மலரவில்லை.

ஆலகால விருட்சத்தின் கிளைகளை வெட்டிப் பலன் இல்லை. அதை அடியோடு சாய்க்கவேண்டும்.

தேசத்தை மாற்றியமைத்திடும் புரட்சிக் கருத்துக்கள் திரிபுபெற்றுத் தேர்தல் தேவதைக்குப் பலியாகிவிடக்கூடாது.

ஆகவே பழைய கட்சிகளையும், பழைய தலைவர்களையும், பழைய கொள்கைகளையும் தூக்கி எறிந்துவிட்டுப் புதிய பாதையிலே புதிய தலைமையிலே நடந்து செல்லத் தமிழர்கள் முன்வர வேண்டும்.

...லமா சோஷலிஸத்துக்குப்பின் ...பக்கேட்டு அதுசம்பந்தமாக திரு. ...ம்மாதம் 3-ந்திகதி 'ஈழநாடு' பத் ...யும் வெளியிட்டிருந்தார். இங்கு ...தரிவித்துள்ள கருத்தைவெளியி

# ...ம் சமஷ்டியும் ...றவேண்டியவை

...து என்றுசொன்
... சோஷ...ம்
...லயே எம்மை
...விடும். உதார
... ஒன்றிரண்டு
...றன். தமிழ்
... திறமையிலி
...க்கித் தள்ளுவது
...? தமிழ்மக்களை
...களில் அமர்த்தி
...ழியின்பேரால்
...பது சோஷலி
...நாட்டுத் தமிழ்
...தறுகுடிகளென
... உரிமையல்ல,
...வும் தருவதற்
... இல்லையென்
...சிசமா? வட
...ாணத்தில் வதி
...லட்சம் தமிழர்
...களத்வதக்

## ...நாவுக்கரசு

...ழியாக ஏற்க
...ன்று சாற்றுவ
... சோஷலிசமாகி
...வெளிநாட்டிலிரு
...ற தமிழ் நூல்
...கைகள் அனைத்
...டைசெய்து அறி
... அடக்குவதும்
...?
...சொன்னால், தப்
... தமிழ்த்தாயின்
...றந்தி விட்ட
...ல் ஒட்டவிரட்டி
...க்கின்ற ஆட்சி
...வறியால் மொழி
...இனவெறியால்
...றியால் மக்கள்
...போட்டு வஞ்
...சியினைநெஞ்சை
...திகரான சோஷ
...று முழங்குதல
... இதைத்தானு
...ஸ்சும், லெனி

னும், ஸ்ராலினும், நவயுகத்து சோஷலிச மேதாவிகளும் நயமாகக் காட்டுகின்ற உதாரணங்கள்.

எனவேதான், அடித்துக் கொல்லுகின்ற காட்டானைக்கும் பாய்ந்துகொல்லுகின்ற கொடும் புலிக்கும் இடையே புள்ளிமான்போல, ஒரு புறத்தே ஐ. தே. க. ஆட்சியின் ஆட்டுழியமும், மறுபுறத்தே சோஷலிசப் போர்வையின் கீழ் வருகின்றகொடும் புலிக்கும் அஞ்சாது தமிழ் மக்கள் வாழவேண்டுமென்றால் அவரவர் பிரதேசத்தை அவரவர்மொழியில் ஆட்சி செலுத்த வல்ல அரசமைப்பு அவசியம்.

விலங்கினங்கள் அழிந்தொழிந்து போகாவண்ணம் அவற்றையெல்லாம் காட்டிலே இயற்கையாய் வாழவிட்டு அக்காட்டையே சுற்றிக் கம்பி வலையடித்து வைத்து நாற்புறமும் நலமாகக் காவலிட்டு 'சரங்கு வறி' எனப் பெயரும்வைத்துக் காட்டிலேமிருகங்களைக் காப்பதுபோல் நாட்டிலே நம்மவரைக் காப்பதற்கு ஆளும் அரசு முறை அமைவது தான் நீதியன்றோ?

இதைத்தானே இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியினரும் இருபது வருஷமாகக் கேட்டுவருகின்றனர். நாட்டைப் பிளந்து தா என்று கேட்கிறார்கள்.

சோசலிசம், சோசலிசம் என்று சொல்லி சோசலிசம் வந்துவிட்டால் நம் சோகக் கதை முடிந்துவிடும் என்கிறார்கள்— இன்று நாடும், நாட்டு முக்கூட்டு முன்னணியும் அமைச்சர்களும் அவர்கள் செயல்முறையும் போகும் போக்கில் பின் நாம் ஒரு இனமாக இருந்தால் அன்றோ சமஷ்டிபற்றியும் சோசலிசம் பற்றியும் பேசமுடியும் என்ற நிலை ஏற்படுமென அஞ்ச இடமுண்டு.

சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற மிகப்பெரிய இரு கட்சிகள் ஆன சிறிமாவேகவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் டட்லியின் ஐ. தே. கட்சியும் என்றோ ஒரு நாள் கொள்கையளவில் மாவட்ட சபையையோ மாகாண சுயாட்சியையோ ஏற்றுவிட்டனர் என்பது வரலாற்று உண்மை.

எனவே நண்பர்கள் விரும்பும் நலமான சோசலிசமும், நாம் விரும்பும் பிரதேச சுயாட்சியும் கைகோத்து ஒன்றாய் மலரட்டும் — பண்டா ... செல்வா அன்று கைச்சாத்திட்ட திட்டம் அமுலாகிவிட்டால் நம்மவர் குறையும் சிங்கள மக்களது நலனும் பேணப்படும்.

## ஜாதிக குருசங்க கிளையின் தீர்மானம்

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறைத் தொகுதி சிறிலங்கா ஜாதிக குரு சங்கக் கிளையின் செயற்குழுக் கூட்டம் அண்மையில் புங்குடுதீவில் உள்ள மேற்படி சங்கத்தின் அலுவலகத்தில் சங்கத்தலைவர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இடமாற்றச் சபையினால் நடாத்தப்படும் பொது மாற்றத்தை ஏற்றுக்கொள்வது தவறுதலாக அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டால் அவர்களின் பிரச்னையைத் தலைமைப் பீடத்துடன் கலந்து தீர்ப்பது, தீவுப்பகுதியில் இருந்து ஆசிரியர்களை யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றும் பட்சத்தில் அவ்விடத்துக்கு எவரையும் நியமிக்க முன்னர் இவ்விடமாற்றம் செய்யக்கூடாது என வித்தியாதரிசியைக் கோருவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

## மீன்பிடி அபிவிருத்திக்கு

பருத்தித்துறை, வியா

பருத்தித்துறை மீன்பிடி அபிவிருத்திக்குழுவை இம்மாதம் 19-ம் திகதி வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எம். தம்பிமுத்து அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

வடமராட்சிப் பகுதியில் மீன்பிடி, கடற்றொழில் அபிவிருத்திபற்றி இக்குழு மீன்பிடி இலாகாவிற்கான ஆலோசனைகளைக்கூறவிருப்பதாகத்தெரிகிறது.

## உயர்ரக விதைகள்

கிளிநொச்சி, வியாழன்

விவசாயப்பகுதியினர் தற்போது இப்பகுதி மக்களுக்கு மலிவான விலையில் நல்ல இன மரக்கறி விதைகளை வழங்கிவருகின்றனர்.

வெண்டை, அவரை, பயிற்றம் விதைகள் தேவையானோர் விவசாய விரிவாக்க நிலையங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வடபிராந்திய விவசாயப் பகுதியினர் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

......

## இலவச வெளியீடு

தாவடி வியா

உடுவில் முருகமூர்த்தி ஆலய சங்காபிஷேகத்தின் போது உடுவில் குமரகோட்டத்தைச் சேர்ந்த திரு சச்சிதானந்தத்தினால் 'விநாயகர் அந்தாதி-கந்தரநுபூதி' பாடல்கள்கொண்ட புத்தகம் இலவசமாக வெளியிடப்பட்டது

## வங்கிகளில் இப்போது கடன் இல்லை

கிளிநொச்சி வியாழன்

இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனையின் பேரில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கிகள் யாவும் தற்போது கடன் வழங்குவதை நிறுத்தியுள்ளன. ஆனால் விவசாயக் கடன்களை வழமைபோல் வழங்கி வருகின்றன.

ஆடம்பரச் செலவுகளுக்கான கடன்கள், அத்தியாவசியமற்றவற்றுக்கான கடன்கள் ஆகியவையே தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் நடைமுறைக்கணக்கு வைத்திருப்போர் இதுவரை பெற்றுவந்த மேலதிகப்பற்றுச் சலுகையும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

மத்திய வங்கியின் மறு அறிவித்தல்வரை கடன் வழங்கப்படமாட்டாது என்று வங்கி அதிகாரி ஒருவர் கூறினார்.

## அதிகபுலமை பரிசு கோரிக்கை

கோட்டை, வியா

இலங்கை மாணவருக்கு அதிக புலமைப்பரிசு கொடுக்க வேண்டுமெனக் கல்வி அமைச்சர் கலாநிதிபதியுதீன்முகமத்கன்பராவில்நடைபெறும் சாம்ராச்சிய நாடுகளின் கல்வி மகாநாட்டில் வலியுறுத்த இருக்கின்றார்.

கல்வி அமைச்சருடன் அமைச்சைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகளும் இம் மகாநாட்டில் கலந்து கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மண்வெட்டிகள் தாராளமாகக் கிடைக்கும்

கோட்டை, வியாழன்

விவசாயிகளுக்கு தேவையான மண்வெட்டிகள் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகளை நீக்கும் வகையில் அரசாங்கம் விரைவில் சுமார் 1 லட்சம் முதலை மார்க மண்வெட்டிகளை இறக்குமதி செய்யவிருக்கின்றது.

நாட்டின் தேவைகளுக்கு சுமார் 6 லட்பம் மண்வெட்டிகள் தேவைப்படும் இதில் சுமார் மூன்று லட்சம் மண்வெட்டிகள் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன. இவை கூட்டுறவுவிற்பனைக் கடைகள் மூலம் பாவனையாளர்களுக்கு விற்கப்படும்.

## செத்தல் மிளகாய் பிடிபட்டது

கோட்டை, வியாழன்

கண்டியில் ஒருகடையில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த சுமார் 300 றுத்தல் செத்தல் மிளகாய் கைப்பற்றப்பட்டது.

ஏற்கனவே நாட்டின் பல இடங்களிலும், பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு பருப்புப் போன்றவை பதுக்கிவைக்கப்பட்டிருந்து கைப்பற்றப் பட்டுள்ளன.

## 16வயதுப்பெண் மர்மக் கொலை

பலாங்கொடை வியா.

பதினறு வயது இளம் நங்கை ஒருத்தி மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பலாங்கொடைப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. அப்பெண்ணை கழுத்தை நெரித்துக் கொலை செய்திருக்கலாமென்று சந்தேகிக்கப்படுகிறது.

இக்கொலை சம்பந்தமான மர்மத்தை கண்டுபிடிப்பதில் பலாங்கொடை பொலிசார் முயன்று வருகின்றனர்.

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

## மகாதேசாதிபதி 'ரசித்த' தமிழ்க் கலை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் வடபகுதிக்கு மஸ்கேலியா நீர் மின்விநியோகத்தை மகாதேசாதிபதி ஆரம்பித்து வைத்த பின்பு நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளைப் பலர் பார்த்திருப்பீர்கள். அன்று பொது நூலகம், மணிக்கூட்டுக் கோபுரம், திறந்தவெளியரங்கின் நாலாபுற வீதியோரங்களிலுமுள்ளமரங்கள் முதலியவைகள் எல்லாம் வர்ண மின்விளக்குகளை அணியாகப் பூண்டு ஜாலம் காட்டியதில் எல்லாவற்றையும் மறந்து பலர் மகிழ்ந்திருப்பார்கள். ஆனல் அன்று நடைபெற்ற தமிழ்க் கலைநிகழ்ச்சிகள் என்போன்ற சிலரைப் பெரிதும் வாட்டின நடைபெற்ற சகல கலைநிகழ்ச்சிகளையும் கூட்டுமொத்தமாகப் பார்க்கும்போது சிங்களக் கலைஞர்கள் அளித்த கலை விருந்து சிறப்பாகவே இருந்தது. காரணம் சிறந்த கலைஞர்களைப் பல்வேறு இடங்களிலுமிருந்து தெரிவு செய்து இந்நிகழ்ச்சியில் அவர்களுக்கு வாய்ப்பளித்தமைதான்.

அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கலாசார அமைச்சு ஒழுங்கு செய்திருந்ததாக அறிகின்றோம்.

கலைநிகழ்ச்சிகள் நாதஸ்வர மங்கல இசையுடன் ஆரம்பமாகும் என சிங்களத்திலும் தமிழிலும் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிங்களக்கலைஞர்கள் மேடையில் வந்து நின்று தமது மங்களவாத்தியமாள சங்கையும் றபானையும் இசைத்தனர். இரு நிமிடங்கள் அவர்களது மங்கள இசை இடம்பெற்றது அடுத்து ஒரு நாதஸ்வர வித்துவானும் தவில் வித்துவானும் மேடையில் வந்து நின்றபடியேஇருநிமிடங்கள வாசித்தார்கள். கோவில்களில் 'பிராயச்சித்தம்' செய்யும் போது கோவிலைச் சுற்றி வைக்கோற் பழுதையைக் கொளுத்தி இழுக்கும்போது வாசிக்கும் தவில் நாதஸ்வர இசையாக அது இருந்தது! இரு நிமிடங்களில் அப்படித் தான் வாசிக்கலாம்!!

நாதஸ்வரம் தமிழரின் பாரம்பரியம் மிக்க தெய்வீகக் கலை. இரண்டு நிமிடங்களில் வாசிக்கக்கூடிய கலையல்ல; நாதஸ்வரத்தை இரண்டு மூன்று மணித்தியாலமல்ல, ஏழு எட்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து இசைக்கும்போது இசைக்கும் கலைஞனும், கலையுள்ளம் படைத்த ரசிகர்களும் தெய்வீக அருள் மழையில் மூழ்கும் அனுபவத்தைப் பெறுவார்கள். அத்தகைய ஒரு கலையை இரு நிமிடங்கள் இசைக்கச் செய்தால் அது கேலியாகத்தானே அமையும்! மேலும் மேடையில் நின்றபடியே நாதஸ்வரம் இசைப்பது நாதஸ்வர இசை சம்பிரதாயத்திற்கே முரணானதாகும்:!

இலங்கையில் சிறந்த நாதஸ்வர தவில் இசையினைக் கேட்பதற்கு எல்லோரும் யாழ்ப்பாணத்தை நோக்கி வருகின்றனர். இந்தியாவில் புகழ்பெற்ற தவில் வித்துவான்கள் இங்குதான் இருக்கிறார்கள். இந்நிலையில்மகாதேசாதிபதி அமைச்சர்கள் சிங்களக் கலைஞர்கள் அத்தனைபேரும் ஒருங்கு கூடியிருந்த சபையில் எமது நாதஸ்வர தவில் கலையின் மகத்துவம் மேலே வர்ணித்தபடி விளக்கப்பட்டமை உண்மையான கலைஞருக்கு வேதனை அளிக்கிறது. இங்குள்ள சிறந்த வித்வான்களை ஒழுங்கு செய்து குறைந்தது அரைமணி நேரமாவது அவர்களுக்கு மங்கள இசை இசைக்க வழி செய்திருக்கலாம்.

தமிழ்க் கலைகளில் ஈடுபாடு காட்டும் யாழ்ப்பாணத்துப் பிரமுகர்கள்கூட இதை உணரவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர்கள் ஆலோசனை கூறியிருக்கலாமல்லவா?

தமிழ்க் கலைநிகழ்ச்சிகளில் வேல்ஆனந்தன், பத்மினி நடராசா ஆகியோரின் மேனகை நடனம் ஓரளவு ஆறுதல் அளித்தது. ஆனல் முற்பகுதியிலே சிறப்பாக நடைபெற்ற கண்டிய நடனங்களையும் எமக்குக் கவலையளித்த தமிழ் நிகழ்ச்சிகளையும் பார்த்துவிட்டு இடைவேளையுடன் மகாதேசாதிபதியும் அமைச்சர்களும் சென்றுவிட்டனர். நிகழ்ச்சிகளையெல்லாம் படம்பிடித்துவந்த அரசாங்க தகவற்பகுதியினருக்கும் அதன் பின்பு களைப்பு வந்ததால் ஓய்வு எடுத்துக்கொண்டனர்

சகல கலைகளும் செழிப்பாக வளர்கின்றதென மதிக்கப்படும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேற்படி விழாவில் தமிழ்க்கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக அமையாதமை யார் குற்றம்? எதையும் முன்னுக்கு நின்று நடாத்தவிரும்பும் பிரமுகர்கள் எமது கலையின் மாண்பினைக் கொஞ்சமாவது விளங்கிக்கொள்வது நல்லது. விழாக்களில் அவர்கள் செய்யும் பல்வேறு முயற்சிகளில் எமது கலை சம்பந்தமான முயற்சியும், அக்கறையும் இருக்குமாக!

திருகோணமலையில் நடைபெறவிருக்கும் சுதந்திரதின விழாவிலாவது தமிழ் நிகழ்ச்சிகள் சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடைபெற்று எமது கலைபெருமையை மற்றவர்களுக்கு விளக்க நல்ல கலைஞர்களை அதற்குத் தெரிவு செய்வதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தமிழ்ப் பெரியார்கள் ஆலோசனை கூறுவார்களென நம்புகிறோம். —எழில்வண்ணன்

யாழ்ப்பாணம்,

## ஒரு வேண்டுகோள்

கைதடி இந்துவாலிபர் சங்கத்துக்கு சைவ இளைஞர் அநாதை இல்லம் நிறுவ இரண்டு ஏக்கர் நிலத்தை மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்கம் கைதடி கண்டிவீதிக்கு அருகாமையில் உதவியமை சைவமக்கள் அனைவரும் அறிவர். இக்காணியை திட்டமிட்டவாறு செயல்படுத்துவதற்காக அகில இலங்கை இந்து இளைஞர் பேரவை அகில இலங்கை இந்துமாமன்றம் ஆகியவற்றிலும் ஆலோசனைகள் பெறப்பட்டன. கடந்த மாதம் நீர்கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை சைவ இளைஞர் பேரவையின் சைவ இளைஞர் எழுச்சிவிழாக் கூட்டத்திலும் இவ்விடயம்பற்றி கலந்துரையாடப்பெற்றது. இக்காணியை துப்பரவு செய்து கட்டிடம் நிறுவி சைவ இளைஞர்களுக்கு ஊதுபத்தி கற்பூரம், சந்தனம், ஈர்க்கில்தடி, கயிறுதிரித்தல் போன்ற சிறு கைத்தொழில்கள் பழக்குவதற்காகத் தீர்மானித்துள்ளோம். இப்பணி நிறைவேறவேண்டுமாயின் ரூபா 40 ஆயிரம் வரை தேவைப்படும். எனவே சைவமக்கள் தங்களாலியன்ற உதவியைத் திரு வ. சுப்பையா பொருளாளர் கைதடி இந்து வாலிபர் சங்கம் கைதடி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம். உதவிபுரிந்தோரின் பட்டியல் நாளிதழ்களில் வெளியிடப்படும்

ஆ. சுந்தையா,
பொதுச்செயலாளர்
சு. கனகசபாபதி,
தலைவர்,

# 'ஆயுதப் புரட்சி அமைதிக்கு வழி வகுக்காது'

## — நியமன எம். பி.

பருத்தித்துறை,வியாழன் 'ஆயுதம் தாங்கிய புரட்சியால் நாட்டின் கொந்தளிப்பு நிலைமை ஏற்படுமன்றி நன்மை எதுவும் காண முடியாது. வர்க்க உணர்வை வளர்த்து, விவசாயி-தொழிலாளர் மூலம் ஓர் அரசாங்கத்தை அமைப்பதே கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையாகும்'.

இவ்வாறு ஆட்சிமன்ற நியமன உறுப்பினர் திரு. எம்.சி.சுப்பிரமணியம்,தமக்கும் புலோலி இராமச்சபை உறுப்பினர்கள் திருவாளர்கள்.ஆ வேலுப்பிள்ளை,எஸ்,தம்பிமுத்து ஆகியோருக்கும், பருத்தித்துறையைச் சேர்ந்த தும்பளைச் சிறுபான்மைத் தமிழர் அளித்த வரவேற்பில் உரை நிகழ்த்துகையில் கூறினார். திரு கே. சேனாதிராசா ஜே.பி. தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு சுப்பிரமணியம், தும்பளைப் பகுதிக்குக் கூடிய விரைவில் ஒரு மின்தறி நெசவு நிலையம் அமைத்துக் கொடுப்பதாகவும் கூறினார்.

வடமராட்சிக் காரியாதிகாரி திரு எம் தம்பிமுத்து, திருவாளர்கள் எஸ் செல்லையா, அன்ரனி, எஸ் இராசையா ஆகியோரும் பேசினர்.

மார்ச் 14-ல் ஜி. சி. ஈ. பரீட்சை

# வெளியேற்றப்பட்டுள்ள மாணவர்கள் அவதி

அராலி,வியாழன் இரண்டு ஆண்டுகள் ஜி. சி. ஈ. சாதாரண வகுப்பில் கல்விகற்று பரீட்சைக்குத் தோற்றியதினால் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள மாணவர்களின் நிலைமை என்னஎன்று தெரியாது பல பெற்றோர் கவலை கொண்டுள்ளனர். இப்பரீட்சை மீண்டும் நடைபெறவிருப்பதால் குறிப்பிட்ட மாணவர்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் இவ்விதம் வெளியேற்றப்பட்ட மாணவர்களைத் திரும்பவும் அனுமதிக்க பாடசாலை அதிபர் மறுப்புத் தெரிவிக்கிறாராம். புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் இரண்டு ஆண்டுகள் ஒரே வகுப்பில் கல்விகற்றவர்களை மூன்றும் வருடம் வைத்திருப்பதற்கு கல்விப்பகுதி நடைமுறை ஒழுங்கு இடம் தரவில்லையென்றும் அதிபர் கூறிவிட்டாராம்.

இதுபற்றி தற்போது கொழும்பிலுள்ள வட்டுக்கோட்டை எம், பி. யுடன் பெற்றோர்கள் தொடர்பு கொண்டுள்ளனர்.

இதுஇப்படியிருக்க ஜி. சி. ஈ, பரீட்சை மார்ச் மாதம் 14ம்திகதி நடைபெறுமென கல்விப்பகுதி நேற்று அறிவித்துள்ளது.

---

# அமைச்சர் உறுதி

மாவிட்டபுரம்,வியாழன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி விளையாட்டு மைதானத்தை திருத்தியமைக்க அரசும் உதவி வழங்குமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த விளையாட்டமைச்சர் திரு கே பி. இரத்தினாயக்காவிடம் யூனியன் கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை மாணவர்கள் விளையாட்டுத்துறையில் முன்னேற நல்ல முறையான விளையாட்டு மைதானம் காங்கேசன்துறை,தெல்லிப்பழை, மாவிட்டபுரம் பகுதியில் இல்லையென்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தை சிறந்த முறையில் நல்ல வசதிகளுடன் அமைத்துத்தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அமைச்சர் பதில் கூறும்போது தெரிவித்தவை வருமாறு:

இம் மைதானத்தின் நீளம் குறைவாகவுள்ளது. இங்கு பயிற்சிபெறுபவர்கள்கொழும்பு,கண்டி போன்ற இடங்களில் உள்ள மைதானங்களில் விளையாடும்போது களைத்துப்போய் கஷ்டமடைய நேரிடும். ஆகவே இம் மைதானத்தை நல்ல முறையில் விளையாட்டு நிபுணர்களைக் கொண்டு விஸ்தரிக்கும்போது அரசு தன்னாலான உதவியை அளிக்கும் என தெரிவித்தார்.

---

# இந்துமத ஆலோசனைச் சபை கூட்டம்

கொழும்பு,வியாழன் இம்மாதம் 18ம் திகதி கலாச்சார அதிபரின் காரியாலயத்தில் இந்துமத ஆலோசனைச் சபைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. பாடசாலைகளில் இந்துமதக் கல்வி,சமஸ்கிருத கல்விக்கு ஊக்கமளித்தல் கொழும்பு விவேகானந்த சபை, பண்ணாகம் இந்துமத சங்கம் ஆகியவற்றின் முறைப்பாடுகளும் ஆலோசனைச்சபை எடுத்த நடவடிக்கைகளும் இவை போன்ற பல நிறுவனங்களிடமும் மற்றும் தனிப்பட்டோரிடமும் இருந்துவந்த கடிதங்கள் ஆராயப்பட்டன. திரு எஸ் யு சோமசேகரம்,திரு என் கிருஷ்ணதாசன் ஆகியோரது கடிதங்கள் மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில் ஆராயப்பட்டன,

மேற்படி சபைக் கூட்டத்திற்கு சுவாமி பிரேமாத்மானந்தா,திருவாளர்கள் என். நவரத்தினம், எம் சண்முகநாதன், கே ராமச்சந்திரா, எம் ஜெயராம், ஏ சின்னசாமி, எம் சிவராசா, ஏ. வைத்திலிங்கம் சைவப்புலவர் எஸ் வல்லிபுரம், எஸ். யு சோமசேகரம் உட்படப் பலர் சமுகமளித்திருந்தனர். சபைத் தலைவர் திரு. வி சிவசுப்பிரமணியம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

# இதைக் கவனிப்பார்களா?

சுழிபுரம், வியாழன் சுழிபுரம் திருவடி நிலை தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நீண்டகாலமாக நிலவிவரும் அதேவேளையில் இதற்குப் பக்கத்தேயுள்ள ஒரு பாடசாலையில் 4 ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்கின்றனர் என்று சுட்டிக்காட்டி சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூகநிலையத்தினர் மகஜர் ஒன்றைக் கல்விப்பகுதிக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

திருவடிநிலைப்பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாக நீக்கி உதவும்படி மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

# நிர்வாகிகள்

தாவடி. வியா தாவடி சைவ இளைஞர் மன்ற வருடாந்தப் பொதுக் கூட்டம் சமீபத்தில் திரு அ. த. அ: கமலநாதன் தலைமையில் நடைபெற்றது இக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்:- திரு. அ. கமலநாதன், உபதலைவர்:- திரு. இ. இராமச்சந்திரன். செயலாளர்!. திரு. தி. அபயரத்தினம், உப-செயலாளர்:- திரு. வை. குணநாதன். பொருளாளர்! திரு. இ. லோகேஸ்வரன், உப-பொருளாளர்:- திரு இ. சந்திரசேகரம்.

0 0

யாழ்ப்பாணம், வெள்ளி கைதடி கொவிலாக்கண்டி சரஸ்வதி சனசமூகநிலைய புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு;-

தலைவர்: திரு. கி. சுப்பையா உபதலைவர்: திரு. சி. இராசா செயலாளர்: திரு. க. மயில்வாகனம் இணைச்செயலாளர் திரு. சோ. நவரத்தினம் பொருளாளர் திரு. க. நாகராஜா உப பொருளாளர் திரு. க. சிவஞானம் கலைப்பகுதிப் பொறுப்பாளர் திரு. க. இராமச்சந்திரன் விளையாட்டுப்பகுதி பொறுப்பாளர் திரு. க. அருளானந்தம் நிலையப் பொறுப்பாளர் திரு. பொ. கந்தையா.

13 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

ஊர்காவற்றுறை, வியா. புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீபாலசுப்பிரமணியசுவாமி கோவில் பரிபாலனசபையின் ஆண்டுக்கூட்டம் சமீபத்தில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. அ. மாணிக்கம், காரியதரிசி திரு. இ. குலசேகரம்பிள்ளை (ஆசிரியர்) தனாதிகாரி திரு. க. தியாகராசா.

நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது

---

# கலையரசுக்கு பாராட்டு

மாவிட்டபுரம், வியா. "கலையரசு சொர்ணலிங்கம் தெய்வீக வரம்பிற்குள் நின்று நாடகக் கலையை இறுதிவரை காப்பாற்றி வளர்த்ததால் இவரது உருவம் கருங்கற் சிலையாக மாவை ஆலய எல்லையுள் 20ம் நூற்றாண்டுக் கலைஞர்கள் வரிசையில் இடம்பெறும்"

இவ்வாறு குரும்பசிட்டி சன்மார்க்க சபை கலையரசு சொர்ணலிங்கம் சாகித்திய மண்டலப் பரிசுபெற்றதைக் கௌரவிக்கும்முகமாக நடத்திய வைபவத்தில் கலந்துகொண்டுபாராட்டுரைவழங்கிய மாவை ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள் கூறினார்.

ஆசிரியர் திரு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

ஆசிரியர் ஏ. ரி. பொன்னுத்துரை தமது தலைமையுரையின்போது கூறியதாவது.

தீராத கலைப்பசி, முன்னுடத்த ஒழுக்கம், குருபக்தி என்பவற்றை கலைவாழ்வின் இரு கண்ணாகக்கொண்டு வாழ்ந்ததால்தான் இன்று கலையரசு பெருங்கலைஞராக மிளிர்கிறார். இவரது கலைத்தொண்டின் ஞாபகமாய் அகில இலங்கை நாடகச் சுற்றுப்போட்டியை அமைக்க கலைஞர்கள் உதவவேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இலங்கைப் பல்கலைக் கழக தமிழ் பேராசிரியர் சு வித்தியானந்தன் பாராட்டுசெய்தி அனுப்பியிருந்தார்.

மற்றும் திரு. த. சண்முகசுந்தரம், திரு. செ. கதிரேசர்பிள்ளை, திரு. க. சொக்கன் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினார்கள்.

சபைச் செயலாளர் திரு க. செல்லையா நன்றி கூறினார்.

# பத்திரமாக . . . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

1970 ஏப்ரலில் அப்பலோ-13 அம்புலிப் பயணத்தின் போது விபத்து ஏற்பட்டதல்லவா? அதிலிருந்துஆபத்து குறித்து தமது கருத்துகளை ஷெப்பார்ட் மாற்றிக்கொண்டு விட்டாரா என்று ஒரு நிருபர் கேட்டார். ஏதோ யோசனைசெய்பவர்போல் ஷெப்பேர்ட் தோன்றினார். பின்னர் கீழ்க்கண்டவாறு பதிலளித்தார்.

"விண்வெளிப் பயண ஆபத்துக்கள் குறித்து என்னுடைய கருத்துக்கள் மாறிவிட்டதாக நான் நினைக்கவில்லை. நீங்கள் ஆபத்தி குறித்தே பேசுகிறபடியால், பத்திரமாகத் திரும்புவது பற்றித்தான் நீங்கள் நினைக்கிறதாக நான் கருதுகிறேன்.

இவ்விஷயத்தில் நாங்கள் கிண்டலாகபேசும் எண்ணம் இல்லை. உங்களுக்குத் தெரிந்திருக்குமே, இந்தத்திட்டம் தொடங்கிய காலத்திலிருந்தே ஒவ்வொரு அம்சமும் எங்களால் முடியுமளவுக்கு ஆராய்ந்து அலசிப் பார்க்கப்பட்டுள்ளது நாங்கள் காணுகிறபடி உள்ள எல்லாப் பிரச்சினைகளுக்குமே தொழில் நுட்பத்தின் முழு வலிமையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்விஷயத்திலும் கூட அப்படியே நாங்கள் எப்பொழுதுமே மிகக் கவனமாக இருந்து வந்துள்ளோம். அது இன்னும் எங்களிடம் உள்ள... எல்லாம் நன்றாகவே நடந்தேறும் என்பதில் எங்களுக்கு திட நம்பிக்கை உண்டு."

அப்பலோ-13 க்கு விபத்து ஏற்பட்டபோதிலும், மிகக் கடினமான நிலைமைகளிலே பத்திரமாகத் திரும்பி வருவது சாத்தியமே என்று நிரூபிக்கப்பட்டது; அத்துடன் பத்திரமாக இருக்கும் நிலையும் கிட்டத்தட்ட 100-க்கு 100 உள்ளது என்பதும் நிரூபிக்கப்பட்டது என்றார், விண்வெளிவிமானி மிச்சல். விண்வெளி விமானி றூஸா சொன்னதாவது: "நாங்கள் முன்னர் பார்க்காத ஒரு பிரச்னை எங்களுக்கு ஏற்படக்கூடும், ஏன் பார்த்த பிரச்னைகூட ஏற்படக்கூடும் என்ற சாத்தியக்கூறு இருக்கவே இருக்கிறது. ஆனால் அந்த சாத்தியக்கூறு அவ்வளவு பெரிதல்ல."

அப்பலோ-13க்கு ஏற்பட்ட விபத்து மாதிரி மீண்டும் நிகழாமல் இருக்க அப்பலோ கார்தியில் செய்யப்பட்டிருக்கும் மாறுதல்கள் தங்களுக்கு திருப்தியளித்துள்ளன என்றனர் இந்த மூன்று விண்வெளி விமானிகளும்.

இந்த அம்புலிப் பயணம் முடிந்த பிறகு விண்வெளித் திட்டத்திலிருந்து ஷெப்பேர்ட் விலகிவிடுவாராஎன்று கேட்கப்பட்டபோது தமது சொந்த எதிர்காலம்குறித்து திட்டங்கள் ஏதும் இன்னும் போடவில்லை என்றார் அவர். தாம் இந்த விண்வெளித் திட்டத்தில்தொடர்ந்து இருந்ததற்கு காரணம், இந்த மதிப்புமிக்க விஞ்ஞானத் திட்டத்துக்கு பணி செய்ய தமக்குகிடைத்துள்ள பயிற்சி தம்மைத் தகுதியுடையவனாக ஆக்கியுள்ளது என்ற நம்பிக்கையாகும் என்றார்.

இந்தக் கோட்பாட்டினையே அவர் விரிவாக்கினார் விண்வெளி ஆராய்ச்சிகளினால் மக்கள் குலத்துக்கு என்ன நன்மை என்று அவரிடம் கேட்டபோது. 'ஆராய்ச்சிதான் வருங்காலத்தின் திறவுகோல் சிறந்த உலகு ஒன்றைத் தோற்றுவிக்கத் திட்டம் எவ்வளவு பயனுள்ளது என்பதை நாங்கள் அறிவோம்."

விண்வெளித் திட்டத்திற்குப் பட்ஜெட் தொகை குறைக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடுகையில் அவர் சொன்னதாவது. "சென்ற பத்தாண்டுக் காலத்தைப் பார்க்கும்போது நமக்கு இருக்கவேண்டிய வேகம் இல்லையே என்பதில் எனக்கு ஏமாற்றந்தான் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம் எல்லாருக்குமே நன்மை தருகிறது."

---

# இ. சேவகருக்கு பாராட்டு விழா

மாவிட்டபுரம், வியா, மாதகல் கிராம சேவையாளராகக் கடமையாற்றிய திரு பி. கபிரியேல் பிள்ளை சண்டிலிப்பாய்க்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதையொட்டி மாதகல் அண்ணா மன்றத்தினரால் ஒரு பிரிவுபசாரவிழா நடத்தப்பட்டது. இவ்வைபவம் மாதகல் மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

# இன்றைய பலன்

தை மாதம் 9-ந்திகதி (22-1-71)

மேஷம்- எதிர்பாராத முடிவுகள் ஏமாற்றத்தைத் தரலாம். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும் இன்று துயர்படிந்ததாள்.

ரிஷபம்- சமயோசித புத்தி உங்களுக்குத் தாராளமான சித்திகளைத் தேடித்தரும்; மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும்.

மிதுனம்- ஏக்கத்தின் சாயல் தாக்கும் எதிர்பாரதவிதமாகச்சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். நிதானம் வேண்டும்.

கடகம்- பூமியால் லாபமுண்டு. புத்திரர் புகழும் சேரும். பொதுசனத் தலைமைக்கான வாய்ப்பும் இடைக்கும்.

சிம்மம்- செய்தொழிலில் சிறப்பான இடம்கிடைக்கும் வெளியூர் அன்பர்கள் உங்களை வரவேற்பதற்கு காத்திருப்பர்.

கன்னி- புதியகோணத்திலிருந்து பொருள்வரவுக்கு இடமுண்டு. தனிமையே துணையெனக்கொண்டு காரியங்களைச் சிறப்பாக செய்வீர்கள்.

துலாம்- பணம்பறி போவதற்கு இடமேற்படலாம் முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

விருச்சிகம்- குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் தென்படும். உங்களைப்பற்றி புனைந்துரைகளைப் பரப்புவதற்கு சிலர் முற்படுவார்கள்

தனுசு- இனிக்கப்பேசி காரியங்களைச் சிறப்பாகச்செய்து முடிப்பீர்கள். மேடைப்பேச்சாளர்கள் பெரும்புகழ் அடைவர்.

மகரம்- முன்னேற்றமான காரியங்களில் எதிர்பாராத தடைகள் ஏற்படலாம். சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு.

கும்பம்- ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் ஏற்படும் கலைஞர்களுக்கு முன்னேற்றம் தென்படும் தாய்வழி மூலம் தனவரவுக்கும் இடமுண்டு.

மீனம்- பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். வெளியிடத் தொடர்புகள் பெருகும். கல்வித்துறையிலும் முன்னேற்றமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# 'பயிற்சித் திட்டத்துக்கு யார், யார் தெரிவாகினர்?'

வேலணை, வியாழன்

பட்டதாரிகள் பயிற்சித் திட்டத்தின்கீழ் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டனர் என்பது பற்றிய விளக்கம் ஒன்றை திட்டமிடல் வேலை வாய்ப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி தீவுப் பகுதி எம். பி. திரு. எ. பொ இரத்தினத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் எவ்வாறு பட்டதாரிகள் தெரிவு செய்யப்பட்டனர் என்று திரு. இரத்தினம் கல்வி அமைச்சிடம் கடிதமூலம் கேட்டிருந்தார். அதற்கு நிரந்தர செயலாளர் பதில் அனுப்பி வைத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1965-ம் ஆண்டிலிருந்து 1969-ம் ஆண்டுக்காலத்தில் பட்டம் பெற்ற ஆண்களும் 1965—1968முடிய பட்டம் பெற்ற பெண்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பெண்களின் பெற்றோர் வருடத்திற்கு 6000 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறுபவர்களும் மணமுடித்த பெண்களின் கணவன்மார் வருடம் 3600 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களும் தெரிவு செய்யப்படவில்லை.

35 வயதுக்கு மேற்பட்டவர்களும், 65-க்கும் 69-ம் ஆண்டுக்குமிடையில் பட்டம் பெறாதவர்களும் இப்போதைக்குக் கவனிக்கப்படவில்லை.

விண்ணப்பம் அனுப்பியவர்கள் சிலர் கொடுத்த தகவல்களுக்கும், கிராமசேவகர்கள் கொடுத்த தகவல்களுக்கும் வித்தியாசம் காணப்பட்டதால் விசாரணை நடைபெறுகின்றன; விசாரணையின் பின்னர் இவர்களைப்பற்றி முடிவுசெய்யப்படும்.

1969-ல் பட்டம் பெற்ற பெண்களில் விசேஷசித்தி பெற்றவர்களும், அமைச்சுகளுக்குத் தேவையான பாடங்களில் சித்தியடைந்தவர்களும் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## மாவிட்டபுரம் குழந்தைவேல்

பழைய நாள் நாதஸ்வர வித்துவானும் இசையாளர் சமூகப் பெருமகனுமான மாவிட்டபுரம் குழந்தைவேல் அவர்கள் தமது 85 வது வயதில் 14-1-71 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அநேகமாய் ஒரு நாற்பதாண்டு வரலாறு படைத்த இசையாளர் சமூக எழுச்சி இயக்கத்தின் ஆதிகர்த்தாக்களான பண்டிதர் ன் ஆசிரியர்கள் அரசாங்க உத்தியோகத்தர்களுடனே கூட பிரதம பணி ஏற்று திரு குழந்தைவேல் இசையாளர் சங்கத்தை ஆரம்பித்து வைத்ததுடன் கோவில் வீதி இசையாளர் மடத்தைப் புதுப்பித்துப் புனரமைப்பதிலும் முன்னின்று உழைத்து பெருமுயற்சி சாதித்து அதில் வெற்றியும் கண்டவர் இளமை சிறிதே மதியம் திரும்பிய காலமாக ஒரு வயதில் சில காலம் நாதஸ்வரம்வாசிப்பதில் சலிப்படைந்து அதற்குப்பதில் கதைப் புத்தகங்களும் பத்திரிகையும் வாசிக்கத்தொடங்கி அதனால் வீட்டிலேயே உட்கார்ந்துவிட்டவர். இவர், பிரபல நாதஸ்வரவித்துவான் மாவிட்டபுரம்இராசாவின் சகோதரரும், நாதஸ்வரம் எம். எஸ் சண்முகநாதனின் பெரியதந்தையும் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி (தவில்)யின் தாய்மாமனுமாவார்' குழந்தைவேல் அவர்களின் ஒன்பது பிள்ளைகளில் இளமையில் விவாகம் செய்துகொண்ட இருவர் தவிர மற்ற ஏழுவரும் அளவெட்டி ஊரை பூர்வோத்திரமாக கொண்டு பாரம்பரியச் சிறப்புப்பெற்ற மேளகாரர் குடும்பங்களில் மணம் புரிந்துகொண்டார்கள். இந்த வகையில் திரு. குழந்தைவேல் தமது வாழ்நாளில் நூற்றுவர் சந்ததிப் பெருவாழ்வு ஒன்றைக் கண்டுகளித்த நிறைமனதினராய் சாதாரண ஆண்டு தைத்திங்கள் முதலாம்நாள் காலை ஊரெங்கும் உற்றார் உறவினர் இல்லங்களில் பொங்கும் புதுக்கலத்தில் பால்பொங்கிவரும் சமயமாக வாழ்வுநீத்து இயற்கை எய்தினர். குழந்தைவேல் புத்திரப்பேற்றில் இரு புதல்வர்கள் ஆசிரியராகவும் மூவர் அரசாங்க சேவையிலும் உள்ளவர். ஒருவர் தவில்காரர். பெண்களில் ஒருவர் போஸ்ட்மாஸ்டருக்கும் மற்றொருவர் நகராட்சிமன்ற சிப்பருக்கும் வாழ்க்கைப்பட்டார்கள்.

சிவபுண்ணியர் மகள் சுப்புக்குட்டியின் தலைமகனை குழந்தைவேல் துரைசுவாமி காந்திமதி இராசா, வள்ளியாச்சி, உருக்குமணி ஆகியோருக்கு உடன்பிறந்த மூத்தோன் ஆவர் திரு குழந்தைவேல் பெரும் முருகபக்தர். நாள்தோறும் தவறாமல் கோவிலுக்குச் செல்வார், மறைவுதினத்துக்கு ஒருவாரம் முன்னதாகத்தான் அவர் கடைசி வழிபாடு இயற்றிய நாள்.

மார்கழிமாதம் பிறந்தது முதல் வீட்டு வாசலில் மெழுகி கோலமிட்டு பிள்ளையார் வைத்து பூச்சூட்டி நன்மனைதோறும் தினமும் மார்கழி நன்னாள் வழிபட்ட இந்துக்கள் இல்லங்களில் அவர் தாம் நாளாந்தம்அவ்விதமாகத் பூஜித்துசேர்த்து வைத்த பிள்ளையார், முழுவதையும் தைபிறக்கபவளத்தேர் ஏற்றி புனித கேணியில் கொண்டுபோய் கலந்துவிடும் பிள்ளையார் தேர் விழா இவ்வாண்டும் வழக்கம்போல் தைத்திங்கள் மூன்றும் நாளான கன்னிப் பொங்கல் தினத்தன்று நடைபெறுவதற்காக யிருந்த ஏற்பாடுகள் திரு குழந்தைவேல் மறைவுக்குத் துக்கம் தெரிவிக்கும் வகையில் கடைசிவேளை பின் போடப்பட்டு விட்டதாக பிள்ளையார்தேர் இயக்குனர் கோவிந்தர் சுப்பிரமணியம் தெரிவிக்கின்றார்.

—யாழ் தேவி

## போட்டியில் பங்குபற்றும் நாடகங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

சித்தங்கேணி நேரு ஜி கலாமன்றம் அகில இலங்கை அடிப்படையில் நடத்தும் நாடகப் போட்டியில் இதுவரை மொத்தம் 27 நாடகங்கள் பங்குபற்றியுள்ளன இவற்றில் 12 சரித்திர நாடகங்களும் 15 சமூகநாடகங்களுமாகும். போட்டியில் கலந்துகொள்ளும் நாடகங்களின் விபரம் வருமாறு:-

இரத்த முத்திரை, கும்பகருணன், கலைக்கோயில் பூம்பொழில், மக்கள் தலைவன் வஞ்சத்தின் விளிம்பில், சாம்ராட் அசோகன், பக்தநந்தனார், கொந்தளிக்கும் உள்ளம், அருளும் மருளும், மயானத்திலே மன்னன், வீரபாண்டிய கட்டபொம்மன், நீங்காத நினைவு, பாசத்தின் முடிவு, மெழுகுவர்த்தி, கண்திறந்தது, ஜீவநாடி, பழிக்குப்பழி, மங்கையின் கண்ணீர், வெள்ளிப்பதக்கம் தியாகி, வாழ்வளித்தவன், எதிர்பாராதது, ரோசாப்பூ, என்றோ ஒருநாள், தங்கைக்காக, ரத்தக்கண்ணீர்.

## வல்வைக்கழகம் சாம்பியன்

வல்வெட்டித்துறை, வியா

கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுவந்த ஏழுபேர் ஒருபக்க உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வல்வை விளையாட்டுக் கழகம் தன்னுடன் போட்டியிட்ட வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தை 10—4 கோல்களால் தோற்கடித்து சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

## வலி வடக்குக்கு வெற்றி

மாவிட்டபுரம், வியா

வலி-வடக்கு விளையாட்டுக்கழகத்தின் தெரிவுக்குழுவும் குரும்பசிட்டி உதயதாரகைமன்ற உதைபந்தாட்டப்போட்டியில் சாம்பியனாகிய கட்டுவன் பாலர் ஞானோதயா விளையாட்டுக் கழகமும் மோதிய சிநேகபூர்வமான உதைபந்தாட்ட போட்டியில் வலிவடக்கு தெரிவுக்குழு வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு திரு. எஸ். கிருஷ்ணன்மத்தியஸ்தம் வகித்தார்.

## இறுதி மோதல்

கிளிநொச்சி, வியா

கிளிநொச்சி விளையாட்டுச் சபையின் ஆதரவில் சின்னத்துரைவெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் நீர்ப்பாசன இலாகா ஊழியர் கோஷ்டியினரும் அருணோதயாக் கழகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன

இறுதியாட்டத்தில் மேற்படி கோஷ்டிகள் இரண்டும் இவ்வாரமுடிவில் மோதும்.

## வல்வைக்கு கேடயம்

பருத்தித்துறை, வியா.

வதிரி தமிழ்மன்ற ஆதரவின் கீழ் நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில், வெற்றிபெற்ற வீரர்களுக்கு பருத்தித்துறை இலங்கை வங்கி மனேஜர் திரு கே நடராஜா பரிசில்களை வழங்கினார்.

வெற்றி வீரருக்கான கேடயம் வல்வை விளையாட்டுக் கழகத்திற்கும் இரண்டாம் பரிசு கரவெட்டி விளையாட்டுக் கழகத்திற்கும் கிடைத்தன. கரவெட்டி ஸ்பேஸ்விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்று வந்தஉதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றி வீரருக்கான வேலுப்பிள்ளை வெற்றிக் கேடயத்தை வல்வை விளையாட்டுக்கழகத்தினர் சுவீகரித்துக் கொண்டனர். இரண்டாம் இடத்தைப் பெற்ற வதிரி டயமண்ட்ஸ் சிவா அன்பளிப்புக் கேடயத்தைப் பெற்றனர்.

## உதைபந்தாட்டம்

நாவற்குழி, வியாழன்

நாவற்குழி விளையாட்டுக் கழகத்திற்கும், திருநெல்வேலி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நாவற்குழி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியில் திருநெல்வேலி விளையாட்டுக் கழகம் 6—1 கோல்களால் வெற்றிபெற்றது திரு. எஸ் குணரத்தினம்மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## ஆரம்பசங்கமாகும்

அராலி, வியாழன்

அராலி கூட்டுறவாளர் சமாசத்தைக் கலைத்துவிட்டு அந்த இடத்தில் ஒரு பெரிய ஆரம்பச் சங்கத்தைப் பதிவு செய்ய கூட்டுறவு ஆக்க ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

'அமெரிக்க

# விவசாயிகள் விமானம் வைத்திருக்கிறார்கள்"

பருத்தித்துறை, வியாழன்

"விவசாயத்துறை மூலம் உணவில்தன்னிறைவுகாணாத ஒரு நாடு மற்றத்துறைகளில் பெருமைப்படக்கூடிய எவ்வித சாதனையையும் நிலைநாட்ட முடியாது. பெருகிவரும் சனத்தொகையைக் கருத்திற்கொண்டு உணவுற்பத்தியைப் பெருக்காவிடின் எதிர்வரும் சந்ததியினரின் ஏழ்மைக்கு வழிவகுத்த குற்றம் எம்மையே சாரும். இப்புனிதபணியை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு இன்றைய வாலிபர்களுக்கே உரியது."

இவ்வாறு யாழ். மாவட்டத்தில் முதன் முதலாக நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இளம் விவசாயிகள் கழக பயிற்சி வகுப்பிலும் கருத்தரங்கிலும் உரையாற்றிய இளம் விவசாயிகள் கழகங்களின் போதனாசிரியர் திரு. சி. சிறீஸ்கந்தராசா கூறினார் தலைமைப்பீட விவசாயப் போதனாசிரியர் திரு கே குமாரசாமி தலைமைதாங்கினார்.

அமெரிக்காவிலுள்ள விவசாயக்கல்வி' நிலையங்களில் ஆராய்ச்சி செய்து விட்டு, அண்மையில் நாடு திரும்பிய திரு. சிறீஸ்கந்தராசா மேலும் கூறியதாவது'

"விவசாயத்துறையில் அலட்சிய மனோபாவம் காட்டினால், விஷம் போலப் பெருகிவரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடியாது. அரசாங்கமே எதையும் செய்யவேண்டுமென்று பொறுத்திராது கூட்டுறவு அடிப்படையில் இளைஞர், விஞ்ஞான முறைகளைக் கையாண்டு தியாக உணர்ச்சியுடன் விவசாயத்துறையிற் குதிக்கவேண்டும்.

அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள மக்கள் அரசாங்கத்தை எதிர்நோக்கி வாழ்வதில்லை, அங்குள்ள சில பணம்படைத்த விவசாயிகள் தனிப்பட்ட விமானங்கள் வைத்திருக்கு மளவுக்கு அங்கு விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது."

## ஆசிரியருக்குப் பொன்னாடை

யாழ்ப்பாணம், வெள்ளி

மீசாலை விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற பண்டிதர் எஸ்.கே. தம்பையாவின் சேவை நலம்பாராட்டுவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது

பண்டிதர் எஸ்,பீ சுவாமிநாதன் தலைமையில் நடந்த இவ்விழாவில் விழாக்குழுசார்பில் எவ் எச், குமாரவேலு பண்டிதர் தம்பையாவுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

திரு கே வி நடராசா சாவகச்சேரி நகரசபைத் தலைவர், திரு சு கனகரத்தினம் திரு ஆர் ரி சுப்பிரமணியம், பண்டிதர் துரைசிங்கம், பண்டிதர் பொன்னுத்துரை, எஸ் காசிநாதர் புறக்டர் எஸ் கே திரவியநாயகம், திரு ஏ பதஞ்சலி உட்படப் பலர் ஓய்வு பெறும் ஆசிரியரின் சேவை பற்றிப் பாராட்டிப் பேசினர், பண்டிதமணி திரு சி கணபதிப்பிள்ளையின் ஆசியுரையை பண்டிதர் பஞ்சாட்சரம் விழாவில் வாசித்தார்.

திரு எம் ரீ சுப்பிரமணியம் தட்டச்சு யந்திரம் மொன்றை அன்பளிப்புச் செய்தார். (கு வி-மட்-நிரு)

## ஸாகிரா - மகாஜன மோதுகின்றன

உதைபந்தாட்டம்

மாவிட்டபுரம், வியா.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் தெரிவுக்கோஷ்டி கொழும்பு சாகிராக்கல்லூரியுடன் இம்மாதம் 24ல் மோதவிருக்கின்றது.

இம்மாதம் 25ம்-ம் திகதி யாழ்ப்பாணம் கிரேடியத்தில் ஆரம்பமாக இருக்கும் அகில இலங்கை பாடசாலைகளின் சாம்பியன் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்வதற்கு இங்கு வரவிருக்கும் கொழும்பு சாம்பியன் கல்லூரியான சாகிராக் கல்லூரி முன்கூட்டியே 24ம் திகதி வந்து பல போட்டிகளில் கலந்து கொள்ளவிருக்கிறது.

இம்மாதம் 24ம் திகதி மாலை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் கோஷ்டியுடன் சாகிராக் கல்லூரி கோஷ்டி தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி மைதானத்தில் மோதவிருக்கிறது.

இத்துடன் சாகிராக் கல்லூரி யாழ் நகரில் ஸ்கந்தவரோதயா கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகியவற்றுடனும் மோதவிருக்கிறது.

## வல்வை புளூஸ் வெற்றி

பருத்தித்துறை, வியா.

நெல்லியடி ஸ்பேஸ் விளையாட்டுக் கழக ஆதரவில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வல்வை புளூஸ்கோஷ்டியும், வதிரி டயமண்ட்ஸ் கோஷ்டியும் மோதிக்கொண்டபோது புளூஸ் கோஷ்டி 10; 4 கோல்களால் வெற்றியீட்டியது.

திரு. எஸ், இராசசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

## சுதந்திரதின விழா

முசலி; வியாழன்

முசலிக் காரியாதிகாரி பிரிவில் இவ்வருடம் நடக்கவிருக்கும் ஈழத்தின் சுதந்திர தினவிழாவுக்காக ஒரு கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியும், ஒரு கலைவிழாவும் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெறவிருக்கின்றன. கலை நிகழ்ச்சிகள் இம்முறை மும்மொழிகளிலும் நடைபெறுகின்றன இவ்விழாவுக்கான பூர்வாங்க ஆயத்தங்களை முசலிக்காரியாதிகாரி திரு. வைத்திலிங்கம் சொக்கலிங்கமும், முசலிக் காரியாதிகாரி பிரிவுக் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. கே. சுப்பையாபிள்ளையும் கவனித்து வருகின்றனர்.

0 0 0

அம்பன், வியா

வடமராட்சிப் பகுதியில் வல்வெட்டித்துறை தெற்குழு மைதானத்தில் அடுத்த மாதம் 4-ம் திகதி இலங்கையின் சுதந்திரதின விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்விழாவில் சைக்கிள் ஓட்டப் போட்டி. கயிறு இழுத்தல், ஓட்டப்போட்டி சிறுவர் ஓட்டம், வயோதிபர்நடைப் போட்டி ஆகியன இடம் பெறவுள்ளன.

மேற்படி விழா வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி திரு மு தம்பிமுத்து தலைமையில் நடைபெறவிருக்கின்றது. இதற்கான நடவடிக்கைகளை உடற்போதனாசிரியர் திரு. க. கதிர்காமத்தம்பி மேற்கொண்டுள்ளார்.

ஆசிய—ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமைக்கு

# 'நேருவுடன் சேர்ந்து நின்று பண்டாரநாயக்கா உழைத்தார்'

கொழும்பு, புதன்

ஆசிய-ஆபிரிக்கநாடுகளின் ஒற்றுமையின் அவசியத்தை காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யு ஆர் டி பண்டாரநாயக்கா உணர்ந்தியதோடு அதற்காகப் பாடுபட்டார். அவர் தனது வாழ்க்கைக்காலத்திலேயே இப்பகுதியின் உறவுகளை வலும்படுத்த விரும்பினர்

இவ்வாறு ஆசிய-ஆபிரிக்க சட்ட ஆலோசனை மகாநாட்டின் ஆரம்பக்கூட்டத்தைத் தொடக்கிவைத்துப் பேசுகையில் பதில் பிரதமர் திரு மைத்திரிபாலசேனநாயக்கா கூறினர்,

திரு சேனநாயகா மேலும் தெரிவித்ததாவது: காலஞ்சென்ற திரு. பண்டிதர் ஜவஹர்லாலநேருவுடனும் முன்னள் பர்மிய பிரதம நீதியரசர் ஊ மைன் ற் தெய்ன் ஆகியோருடன் சேர்ந்து இந்த ஸ்தாபனத்தை வலிமைப்படுத்துவதற்கு பாடுபட்டார். இந்தக்கமிட்டியின் முதலாவது கூட்டத்தை 1960ம் ஆண்டில்ஆரம்பித்த பொழுது பெரும் அதிர்ச்சி ஒன்றுஏற்பட்டது அப்போது தான்பண்டாரநாயக்கா துப்பாக்கிகுண்டுக்குபலியானுர். 11ஆண்டுகளுக்குப்பின் நீங்கள் இங்கு கூடுகிறீர்கள். இப்பொழுது இங்கு கொலைபுரிய துப்பாக்கிக்குண்டு இல்லை மனிதனுடைய கௌரவம் பிரகாசித்துக் கொணடிருக்கிறது.

இப்பொழுது இக்கமிட்டி முன் இரு முனைச் சேவை உள்ளது. சமூகத்தின் நலத்திற்கேற்ப சர்வதேசச் சட்டங்களை உருவாக்குவதில் ஆசிய ஆபிரிக்க நாடுகள் ஒத்துழைக்க வழி செய்வது ஓர் அம்சம். இறந்த காலத்தின் நன்மையையும், நிகழ்காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யவும், எதிர்காலத்தின் சவாலை ஏற்றுக் கொள்ளவும் கூடிய முறையில் சர்வதேச சட்டங்களை ஆக்குவதற்கு அந்தந்த நாட்டு அரசாங்கங்களுக்கு ஆலோசனை வழங்குதல் இன்னேர் அம்சமாகும். எனவே ஐ. நா. வில் இன்று பிரச்னைகளாகவுள்ள பல விஷயங்களை தீர்த்துவைக்கும் பணியில் இக்கமிட்டி ஈடுபடுமென நம்புகின்றேன்.

நம்மத்தியில் இருக்கக் கூடிய கடல் பிராந்திய உரிமை, கடலில் மீன் பிடித்தல் போன்ற பிரச்னைகளில் இக்கமிட்டியின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்குமென்றும் அவர் கூறினர்.

(சி. பி. ஏ.)

......

## தொடர்ந்து நடக்கிறது

ஊரதீவு, புதன்

வேலணை மத்தியகல்லூரியில் எட்டாம் வகுப்பும் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் ஏழாம் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் இவ் வகுப்புக்கள் ரத்துச்செய்யப்படும் என்று கல்விஇலாகா அறிவித்திருந்தது.

— —

பரந்தன்

## இரசாயன கூட்டுத்தாபன புதிய தலைவர்

கொழும்பு, புதன்

பரந்தன் ரசாயன கூட்டுத்தாபனத்தின் தலைவராக முன்னள் ஆடிட்டர் ஜெனரல் திரு பி எல். டபிள்யு. பெர்னுண்டோ இன்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார். திரு. டட்லி குணசேகராவின் இடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இந்தக் கூட்டுத்தாபனத்தின் டைரக்டர்களில் ஒருவரான திரு. எம். துரைராஜா நிலையத்தின்மீது சில குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து ராஜிஞமா செய்தார்.

(சி. பி. ஏ.)

---

## இறுதி நேர அந்தரங்கக் கூட்டம்

சிங்கப்பூர், ஜன. 20

தென்னுபிரிக்காவிற்கு ஆயுதம் விற்பது பற்றிய பிரச்னை குறித்து சாம்ராஜ்ய நாடுகளின் தலைவர்களின் இறுதி நேர அந்தரங்கக்கூட்டம் நடைபெற்றது இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் அந்தரங்கக் கூட்டத்திற்கு ஒத்துழைத்தார் இத்தலைவர்கள் கூட்டத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட நைஜீரியாவின் திட்டத்திற்கு பாகிஸ்தான் சில யோசனைகளைத் தெரிவித்திருக்கின்றது.

— —

## உற்சவம்

கோப்பாய், வியா

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவில் வருடாபிஷேகமும் மணவாளக் கோல உற்சவமும் இம்மாதம் 31-ம் தேதி நடைபெறவுள்ளது.

—

## மைசூர் செல்கிறுர்

கோப்பாய், வியா

நல்லை ஞான சம்பந்தர் ஆதீன அதிபர் ஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சமயப்பிரசாரத்தின்பொருட்டு இம்மாதம் 22-ம் தேதி மைசூருக்குச் செல்கிறுர்.

## கிணற்றுள் இறந்து கிடந்த சிறுவன் மரணத்தில் "மர்மம்"

முசலி, புதன்

கடைசியாக 'போலை' விளையாடிக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் 13 வயதுச் சிறுவன்பாழடைந்த கிணற்றுள் மாண்டுகிடந்தான்படுமோசமாகத்தாக்கப்பட்டு இறந்த பின்னரே கிணற்றுள் இச்சிறுவன் வீசப்பட்டிருக்கலாமென பொலிசார் நம்புகின்றனர்.

தெஹிவளையில் கொலை செய்யப்பட்டு கிணற்றில் வீசப்பட்ட கோதபாயா என்ற சிறுவனை நினைவூட்டுவதாக உள்ள இச்சம்பவம் மன்ஞர் மாவட்டத்திலுள்ள 'மாவிலங்கேணி'யிலே நடந்துள்ளது,

இக்கிராமத்தில் வசிக்கும் மடுதீன் தம்பதிகளின் இரண்டாவது மகனுன இச்சிறுவனின் மரண விசாரணையை நடாத்திய நானுட்டான் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு: ஜே. சி. கிருபரட்ணம் மரண விசாரணையின் பின் இம்மரணம் சம்பந்தமாக பொலிசாரை புலன்விசாரணை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

## 'சிக்கனத்தை கடைப்பிடித்து அரசுக்கு உதவுங்கள்'

— வர்த்தக அமைச்சர்

கோட்டை, புதன்

'பொருளாதார அமைப்பில் ஏற்படும் மாற்றம் சமுதாயத்திலும் மாற்றத்தைக் கொண்டுவரும். நாட்டின் நலன்கருதி இத்தகையமாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்'

கொலன்னுவை தம்மபாடசாலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி பி இலங்கரத்ன உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

ஆயுதப்புரட்சியால் சமுதாயத்தில் மாற்றம் ஏற்படுத்த இயலாது அத்தகைய நோக்கமும்இருக்கக்கூடாது. மக்களது ஒற்றுமையின் பலத்தினுலேயே எந்தவித மாற்றத்தையும் சமுதாயத்தில் ஏற்படுத்தலாம்.

மக்கள் ஆடம்பரமற்ற எளிமையான வாழ்க்கை வாழவேண்டும். வைபவங்களுக்குக் கூடிய பணத்தைச் செலவிடாது சிக்கனமாகவே யாவற்றையும் செய்து முடிக்கவேண்டும். இதனுல் நீங்கள் அரசாங்கத்துக்கு உதவி செய்தவர்கள் ஆகிறீர்கள்.

இவ்வைபவத்தில் மகா சங்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் மற்றும் பலரும் உரையாற்றினர்.

நீர்வேலியில் பரிதாப சம்பவம்:

# காரில் மோதுண்டு வயோதிப மாது பலி

யாழ்ப்பாணம், வியா.

வயோதிப மாது காருக்கு பலியானுர். நீர்வேலியில் இப்பரிதாப சம்பவம்நேற்று பிற்பகல் நடைபெற்றது.

கந்தப்பு முத்துப்பிள்ளை என்ற 80 வயது வயோதிப மாதுவே காரினுல் மோதுண்டுஸ்தலத்தில் துடிதுடித்து மாண்டார்.

பருத்தித்துறை நோக்கி யாழ் - பருத்தித்துறை பிரதான வீதியில் வந்துகொண்டிருந்த காரொன்று இவரை மோதியது. காரில் சிக்கிய இந்தமூதாட்டி நீர்வேலி கிழக்கைச் சேர்ந்தவராவர். கார்சாரதிபொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார், கோப்பாய்பொலிசார் விசாரணை நடத்துகின்றனர். (கு. வி. ம.)

## இரும்புக் கம்பியால் வயோதிபரைத் தாக்கினராம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஏலவிற்பனையில் காணி வாங்கச் சென்றவயோதிபர் ஒருவர் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டாராம். படுகாயத்திற்குள்ளான இவ் வயோதிபர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் உடுப்பிட்டியில் நடந்தது.

சின்னக்குட்டி ஆறொன் என்ற இவ்வயோதிபர் யாழ் ஆஸ்பத்திரிப் பொலிசில் அளித்துள்ள வாக்குமூலத்தில் ஏலவிற்பனையில் தாம் காணிவாங்கச் சென்ற போது தில்லைமயிலன் மற்றும் வள்ளையன் என்பவரது மனைவி ஆகியோர் தம்மை இரும்புகம்பிகளால் தாக்கியதாகக் கூறியிருக்கிறுர்,

(கு விம)

—

## செல்வத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதி திரு செ தனபாலசிங்கம் தலைமையில் நடந்தது.

பூஜை,பஜனை ஆகிய நிகழ்ச்சிகளுடன் விழா ஆரம்பமானது சுவாமி சச்சிதானந்தஜி மேலும் பேசும்போது,பரிபூரண யோகநிலையில் நாம் வாழப்பழகிக்கொள்ள வேண்டுமென்றும் வெளிநாட்டில் தாம் ஆற்றிய பணியின் வெளிப்பாடாகத் திரைப்படங்கள் உள்ளன வென்றும் தெரிவித்தார்

திவ்விய ஜீவன சங்கச் செயலாளரான திரு எஸ். கனகரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தும்போது பல பல வெளிநாட்டவர்கள் யோக வாழ்க்கையை மேற்கொண்டு ஆத்மீக வழிக்கு வர வழிகாட்டியாக விருந்தவர் சுவாமி சச்சிதானந்தஜி என்று தெரிவித்தார்;

முதலியார் செ மூத்ததம்பி பேசுகையில் யோகாசனப் பயிற்சியை இலங்கையின் முக்கிய பட்டினங்களான திருகோணமலை, கண்டி ஆகியனவற்றில் பயிற்சி நிலயங்கள் வைத்து ஆத்மீக நெறிக்கு வழியமைத்தவர் சுவாமிஜி என்ருர்.

கடவுளின் ஆட் சிக்குட்பட்டவர்களாக மனித இனம் ஓங்குவதற்கு ஆத்மீக வழியே சிறந்ததென திரு. செ.தனபாலசிங்கம் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார். நல்லை ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீசுவாமிநாதத் தம்பிரான் பேசுகையில், வெளிநாட்டவர்கள் ஸ்ரீபஞ்சாட்சரத்தைச் சொல்லுவதற்கு சுவாமிஜியின் சேவையே காரணமாக அமைந்துள்ளது என்று தெரிவித்தார்,

அமெரிக்க சீடர்களுள் நால்வரும் உரையாற்றிய போது செல்வத்தின் மிதமான தன்மையினுல் ஏற்பட்ட டாம்பீக வாழ்வில் கிடையாத அமைதியையும் நல்ல தன்மைகளையும் பெறுவதற்கு யோகாசனம் வழிகாட்டுகிறது என்ருர்கள். திரு கே பி ஹரனும் பேசினர். (கு வி ம)

......

## இடமாற்றம்

யாழ்ப்பாணம் வியா

பிரபல சமூகசேவையாளரும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலய ஆசிரியருமான திரு. க.நடராசா 20ந்திகதி தொடக்கம் மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்'

......

## வடபகுதிக்கு 20 புதிய பஸ்கள்

பருத்தித்துறை, புதன்

பழைய பஸ் வண்டிகள் சிலவற்றைக் கொழும்புக்குத் திருப்பியெடுத்த இ. போ ச தலைமைப்பீடம் சுமார் 20 பஸ்வண்டிகளை வடபகுதிக்கு அனுப்பவிருப்பதாகத் தெரிகிறது. அநேகமாக இவை லேய்லன்ட் பஸ் வண்டிகளாகவே இருக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பனங்காமம அபிவிருத்திச் சபை

முசலி, வியாழன்

"சமீபத்தில் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட கிராமசபைப்பகுதி அபிவிருத்திச்சபைத்திட்டத்திற்கமைய மன்ஞர் மாவட்டத்தில் பல அபிவிருத்திச் சபைகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. இச்சபைகளின் நோக்கம், ஒவ்வொரு கிராம சபைப் பகுதியிலிருக்கும் கிராமமுன்னேற்றச் சங்கம், மாதர் கிராமமுன்னேற்றச் சங்கம், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், பயிர்ச்செய்கைக்குழுக்கள், என்பவற்றின் தலைவர்களையும் இக்கிராம சபைத்தலைவர், உறுப்பினர் என்போரையும் அங்கத்தவர்களாகக்கொண்டு கிராம சபைப்பகுதியிலுள்ள விவசாய, நீர்ப்பாசன, சிறுகைத்தொழில், மீன்பிடி மற்றும் மக்கள் தேவைக்கான முன்னேற்றங்களைச் செய்வதாகும்.

எனவே இச்சபையில் அங்கத்துவம் வகிக்கும் மக்கள் பிரதிநிதிகள் தமது கிராம சபைப்பிரிவு மிகவும் அத்தியாவசியமான தேவைகளை முதலில் செயற்படுத்த எனக்கு யோசனை கூறவேண்டும்."

மாந்தைக் காரியாதிகாரி பிரிவு பனங்காமம் கிராம சபைப்பிரிவு அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணக்கூட்டத்தின்போது மாந்தைக் காரியாதிகாரி திரு. முத்தையா சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினர். இக்கூட்டடத்துக்கு மன்ஞர் அரசாங்கஅதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் தலைமை வகித்தார்.

......

## கத்திக் குத்து

யாழ்ப்பாணம், வெள்ளி

கள்ளியங்காடு மா பாஸ்கரமூர்த்தி என்ற இளைஞரை அதே இடத்தைச் சேர்ந்த திரு. எஸ். தவராசா கத்தியால் குத்தியதாக யாழ் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்களுக்கிடையில் சயிக்கிள் வாடகை சம்பந்தமாகப்பிரச்னை இருந்ததாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு வி ம)

......

## முத்துராஜவேலயில் எண்ணெய் வளம்

கோட்டை வியாழன்

இலங்கை மண்ணியல் ஆராய்ச்சிப் பகுதியினர் முத்துராஜவேல பகுதியில் சமீபத்தில் பெருமளவில் கனிப்பொருள் எண்ணெய் வளத்தைக் கண்டுபிடித்துள்ளனர்

முத்துராஜவேலப் பகுதியில் உள்ள சதுப்பு நிலங்கள் மேற்படி எண்ணெய் வளமுள்ள பகுதியை வீடமைப்புத் திட்டத்துக்கு ஒதுக்கவேண்டுமெனத் தீர்மானித்தருந்த பொழுதே அப்பகுதி கனிவளம், எண்ணெய் வளம் நிறைந்துள்ளது என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள கனிப்பொருள் வளத்தை ஆராய்ந்து அவற்றைப் பயன்படுத்துவது குறித்தும் நடவடிக்கை யெடுக்க விசேடதிட்டமொன்று தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு தை மாதம் 22- திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது